




# தமிழரசு

1.6.1995 ரூ.3






செல்வி. ஷோபனா, இன்னிசை

உலகத் தமிழ் மாநாடு

கலை நிகழ்ச்சிகளில்

சில....



திரு. நரசிம்மாச்சாரி -
திருமதி. வசந்த லட்சுமி, நாட்டியம்




திரு. டி.எம். கிருஷ்ணா, இன்னிசை

தமிழரசு
திருவள்ளுவர் ஆண்டு: 2026
வைகாசித் திங்கள்: 18
மலர்: 25 இதழ்: 23
1.6.1995 விலை: ரூ. 3

# இந்த இதழில்...

* ஆசியாவிலேயே அமைக்கப்பட்ட முதல் பல்வகை ரோஜா மலர்த்தோட்டம்! ........ 2
* திரைப்படக் கல்லூரியின் 31-வது ஆண்டு விழா ........ 7
* ஏர்க்காட்டில் எழில்மிகு கோடைவிழா! ........ 9
* வட ஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்டத்தில் குழந்தை உழைப்பாளர் குறித்துக் கணக்கெடுப்பு ........ 11
* 3 மாவட்டங்களில் 100 சிறப்புக் காவல் அலுவலர்கள் நியமனம் ........ 15
* இந்த அரசால் எதுவும் முடியும்! - *இயக்குநர் பாரதிராஜா* ........ 17
* கண்ணியம் மிக்க காயிதே மில்லத் ........ 24
* மாணவர் பக்கம் ........ 28
* பெண்களின் பெருமை! - *டாக்டர் லலிதா காமேஸ்வரன்* ........ 30
* கோவை மாவட்டம்: பிற்பட்டோர் நலம் ........ 33
* திரை உலகின் திருக்குறள்! - *கவிஞர் முத்துலிங்கம்* ........ 35
* பெண்களும் சர்க்கரை நோயும் ........ 41
* நூல் நயம் ........ 46



## இதழ்தோறும் ஓர் இனிய குறள்:

**துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து**
**இறந்தாரை எண்ணிக்கொண் டற்று. [22]**

* பற்றுக்களைத் துறந்தவர்களின் பெருமையை அளந்து கூறுதல், உலகத்தில் இதுவரையில் பிறந்து இறந்தவர்களை எண்ணிக் கணக்கிடுவதைப் போன்றது.

## அட்டை சொல்லும் செய்தி



# ஆசியாவிலேயே அமைக்கப்பட்ட முதல் பல்வகை ரோஜா மலர்த்தோட்டம் !

## உதகையில் எண்ணம் கவரும் வண்ணமிகு மலர்த் திருவிழா!

## மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்

*மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 20.5.95 அன்று காலை 10.30 மணி அளவில் தமிழக அரசு விருந்தினர் மாளிகையில் இருந்து*

புறப்பட்டு, 10.40 மணி அளவில் அரசு தாவரவியல் பூங்கா (Government Botanical Garden) வந்தடைந்தார்.

வழி நெடுகிலும் சாலையின் இருமருங்கிலும் குழுமியிருந்த பொதுமக்கள் மாண்புமிகு முதலமைச்சரைப் பார்த்ததும் ஆரவாரம் செய்து கையசைத்தனர். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் உடன் கையசைத்து, தனது மகிழ்ச்சியைத் தெரியப்படுத்தினார்கள்.

தாவரவியல் பூங்காவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களை, மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர், திரு சேடபட்டி இரா. முத்தையா அவர்களும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், மாவட்ட ஆட்சித் தலைவரும், காவல்துறை அதிகாரிகளும், வரவேற்றார்கள்.

## சிறப்புத் தூண்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் நூறாவது மலர்க் கண்காட்சியின் நினைவாக அமைக்கப்பட்டிருந்த நூறாவது ஆண்டு மலர்த் திருவிழா சிறப்புத் தூண் ஒன்றினைத் திறந்து வைத்தார். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஒரு பித்தானை அழுத்தியதும், மேடைக்கு எதிராக அமைக்கப்பட்டிருந்த அழகான தூண் ஒன்று வெளியானது. பின்னர் வேறு எங்கும் இல்லாத அளவிற்கு 1919 ரக ரோஜா மலர் வகைகளைக் கொண்ட, விஜயநகரம் அரசுப் பண்ணையில் அமைக்கப்பட்ட ரோஜா மலர்த் தோட்டத்தைத் திறந்து வைக்கும் வகையில் ஒரு பித்தானை அழுத்தி, அங்கிருந்த ஒரு கல்வெட்டை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

## புத்தக வெளியீடு

ரோஜா மலர்களைப் பற்றிய புத்தகம்



ஒன்றினையும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இந்த நிகழ்ச்சியில் வெளியிட்டார். அப்புத்தகத்தின் முதல் பிரதியை மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர், திரு சேடபட்டி இரா. முத்தையா அவர்கள் பெற்றுக்கொண்டார்.

சரித்திரச் சிறப்பு வாய்ந்த அரசு தாவரவியல் பூங்கா (Government Botanical Garden) பற்றி எழுதப்பட்டுள்ள புத்தகம் ஒன்றினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வெளியிட, அதன் முதல் பிரதியை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர், திரு எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடமிருந்து பெற்றுக் கொண்டார்.

## விழா மலர்

நூறாவது மலர்த் திருவிழாவின் நினைவாகத் தயாரிக்கப்பட்டுள்ள விழா மலர் (Souvenir) ஒன்றினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டார். மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர், திரு கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள் விழா மலரின் முதல் பிரதியை, தமிழக முதலமைச்சர் அவர்களிடமிருந்து பெற்றுக் கொண்டார்.

Chandler என்று அழைக்கப்படும் புதிய உயர் ரக ஸ்டிராபெர்ரி பழ வகையினை முதன் முதலாகத் தமிழ்நாட்டிற்கு அறிமுகப்படுத்தும் வண்ணம், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் Chandler வகை ஸ்டிராபெர்ரி பழங்கள் அடங்கிய பழக் கூடை ஒன்றை வழங்க, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர், திரு எஸ். கண்ணப்பன் அவர்கள் அந்தப் பழக் கூடையை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடமிருந்து பெற்றுக் கொண்டார்.

## புதிய ரக ரோஜா!

கோயம்புத்தூர், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தினால் உருவாக்கப்பட்ட புதிய ரக ரோஜா மலர் ஒன்றினை இந்த நிகழ்ச்சியின்போது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டார்கள். மாண்புமிகு வேளாண் துறை அமைச்சர், திரு. கு.ப. கிருஷ்ணன் அவர்கள் இந்த புதிய ரக ரோஜா செடியினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடமிருந்து பெற்றுக் கொண்டார்.

> மாலைக்கு மலர் தேவை. மலருக்கோ தோட்ட வளம் தேவை. அதுபோலத்தான் அரசுக்கு அழகுதர மக்களின் ஒழுக்கம் தேவை. மக்கள் ஒழுக்கமுள்ளவர்களாக வாழவோ சமதர்ம முறையில் அமைந்த வாழ்க்கைப் பாதை தேவை.
>
> -பேரறிஞர் அண்ணா

## மலர்த் திருவிழா

பின்னர், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் நூறாவது மலர்த் திருவிழாவைத் துவக்கி வைக்கும் வண்ணம் ஒரு பித்தானை அழுத்தியதும், மலர்களால் அலங்கரிக்கப்பட்ட இரண்டு அலங்காரக் கதவுகள் தானாகத் திறந்து கொண்டன. அப்பகுதியின் உள்ளே சென்று அங்கே சிறப்பாக அடுக்கி வைக்கப்பட்டிருந்த பல்வேறு மலர்ச் செடிகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டார்.

பின்னர், மலர்களால் தங்களை அலங்கரித்துக் கொண்டு, மலர்களையும், மலர்க் கொத்துக்களையும் கையில் ஏந்தி வந்த 11 பள்ளிக் குழந்தைகள் மாண்புமிகு தமிழக முதலமைச்சரிடம் மலர்க் கொத்துக்களையும், மலர்ச்செண்டுகளையும் வழங்கி தங்களுடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், அவர்களிடமிருந்து அவற்றைப் பெற்றுக்கொண்டு தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் வண்ணம் அக்குழந்தைகளைத் தட்டிக் கொடுத்தார்.

பின்னர், தாவரவியல் பூங்காவிலிருந்து புறப்பட்டு, விஜயநகரம் பண்ணையில் அமைக்கப்பட்டுள்ள புதிய ரோஜா மலர்த் தோட்டத்திற்குச் சென்றார். அங்கே அமைக்கப்பட்டிருந்த ஒரு மேடையில் இருந்து மலர்த் தோட்டம் முழுவதையும் பார்வையிட்டார்.

மாண்புமிகு வேளாண் துறை அமைச்சர், திரு கு.ப. கிருஷ்ணன் அவர்களும், வேளாண் துறை அரசுச் செயலாளர், திரு ஆர்.சி. பாண்டா அவர்களும், ரோஜா மலர்த் தோட்டத்தின் சிறப்பு அம்சங்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு எடுத்து விளக்கினார்.

## முதல் ரோஜா மலர்த் தோட்டம்!

இந்த ரோஜா மலர்த் தோட்டத்தில் 1919 வகை ரோஜா மலர்ச்செடிகள் அமைக்கப் பட்டுள்ளன. ஆசியாவிலேயே இத்தனை வகையான ரோஜா மலர்ச்செடிகளைக் கொண்ட முதல் ரோஜா மலர்த் தோட்டம் இதுவே ஆகும். சண்டிகாரிலும், டெல்லி ராஷ்டிரபதி பவனிலும் அமைந்துள்ள ரோஜா மலர்த் தோட்டங்களிலும் கூட இத்தனை வகையான ரோஜா ரக மலர்ச் செடிகள் அமைக்கப்படவில்லை. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இந்த ரோஜா மலர்த் தோட்டம் எவ்வாறு சிறப்பாகப் பயணிகளைக் கவரும் வண்ணம் அமைக்கப்பட வேண்டும் என்பதற்கு வேண்டிய ஆலோசனைகளை யும், அறிவுரைகளையும் வழங்கினார். இந்த வேளாண் பண்ணையில் அமைந்துள்ள கட்டடங்களையும், இயற்கைச் சூழலுக்கு ஏற்ப மாற்றி அமைக்க வேண்டும் என்றும், இந்த ரோஜா மலர்த் தோட்டத்தை நன்முறையில் பராமரிக்கத் தகுந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் கருத்துத் தெரிவித்தார்.

பின்னர், மாண்புமிகு தமிழக முதல மைச்சர் அவர்கள் அங்கிருந்து புறப்பட்டு, சாலையின் இருமருங்கிலும் கூடியிருந்த மக்களைப் பார்த்துக் கை அசைத்த வண்ணம் தமிழகம் அரசு விருந்தினர் மாளிகைக்கு வந்தடைந்தார்.




## வாழ்க தமிழ் மொழி!

- சேமமுற வேண்டுமெனில்
  தெருவெல்லாம் தமிழ்முழக்கம்
  செழிக்கச் செய்வீர்.

- வள்ளுவன் தன்னை உலகினுக்கே - தந்து
  வான்புகழ் கொண்ட தமிழ்நாடு - நெஞ்சை
  அள்ளும் சிலப்பதி காரமென்றோர் - மணி
  யாரம் படைத்த தமிழ்நாடு.

- யாமறிந்த மொழிகளிலே
  தமிழ் மொழிபோல் இனிதாவது
  எங்கும் காணோம்.

- யாமறிந்த புலவரிலே
  கம்பனைப் போல் வள்ளுவர்போல்,
  இளங்கோ வைப்போல்,
  பூமிதனில் யாங்கணுமே
  பிறந்ததிலை உண்மை, வெறும்
  புகழ்ச்சி யில்லை.



## தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் அரசு அலுவலர்களின் உறுதிமொழி

முன்னாள் பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி நினைவு நாளையொட்டி, 19.5.95 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சியில், மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் முன்னிலையில், அரசு அலுவலர்கள் உறுதிமொழி ஏற்றனர். முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் திருவுருவப் படத்திற்கு, மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் மலரஞ்சலி செலுத்தினார்.

"அகிம்சை, சகிப்புத் தன்மை ஆகியவை நம் நாட்டின் மரபுகளில் தளராத நம்பிக்கை உடைய இந்திய மக்களாகிய நாம், எவ்வகையான கொடுஞ்செயல்களையும் வன்முறைகளையும் முழு ஆற்றலோடு எதிர்ப்போம் என்று உறுதி கூறுகிறோம்.

"எல்லா மக்களிடத்திலும் அமைதி, சமுதாய ஒற்றுமை, நல்லுணர்வு ஆகியவற்றைப் போற்றி வளர்க்கவும், மக்களுடைய உயிருக்கும் நற்பண்புகளுக்கும் ஊறுவிளைவிக்கும் பிரிவினைச் சக்திகளை எதிர்த்துப் போராடவும் நாம் உறுதி கூறுகிறோம்" என்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் 'கொடுஞ்செயல் எதிர்ப்பு நாள்' உறுதிமொழியைச் சொல்ல, மாண்புமிகு அமைச்சர்களும், அலுவலர்களும் அதைத் திரும்பச் சொல்லித் தாமும் உறுதிமொழி ஏற்றனர்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், அரசு தலைமைச் செயலாளரும், அரசு உயர் அலுவலர்களும், பிற அலுவலர்கள் பலரும் கலந்து கொண்டனர்.



# திரைப்படக் கல்லூரியின் 31-வது ஆண்டு விழா

## மாண்புமிகு செய்தி- விளம்பரத்துறை அமைச்சர் பரிசுகள் வழங்கினார்

**தி**ரைப்படக் கல்லூரி ஆண்டு விழாவில் சிறந்த மாணவர்களுக்கு மாண்புமிகு செய்தி விளம்பரத் துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள் விருதுகள் வழங்கினார்.

திரைப்படக் கல்லூரியின் 31-வது ஆண்டு விழா, சென்னைத் தரமணியில் உள்ள ஜெ. ஜெயலலிதா திரைப்பட நகரத்தில் 23.5.95 அன்று நடந்தது. விழாவுக்கு ஜெ.ஜெ. டிவி. நிர்வாக இயக்குநர் திரு வி. பாஸ்கரன் அவர்கள் தலைமை தாங்கினார். விழாவில் நடிகை கஸ்தூரி குத்துவிளக்கேற்றித் தொடங்கி வைத்தார்.

விழாவில், மாண்புமிகு செய்தி விளம்பரத் துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள் கலந்துகொண்டு, 1993-94-ஆம் ஆண்டில் சிறந்த இயக்குநருக்கான டைரக்டர் கே. சுப்பிரமணியம் நினைவு விருதை, திரைப்படக் கல்லூரி மாணவர் திரு சரவண குமாருக்கு வழங்கினார்.

மற்றும் சிறந்த இயக்குநருக்கான ஏவி.எம். நினைவு விருதை திரு நாகரத்தினம், ஒளிப் பதிவாளர் விருதை திரு கே. வெங்கடேசுவர ராவ், சிறந்த ஒலிப்பதிவாளருக்கான விருதை திரு எஸ். ஜெய்சங்கர், மற்றும் சிறப்புப் பரிசுகளை திரு எஸ். ராஜூ, திரு எல். கோட்டையன், திரு ஜெயபாண்டியன், திரு சோனியா ஆகியோருக்கும் மாண்புமிகு செய்தி விளம்பரத்துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள் வழங்கிப் பாராட்டினார்.





விழாவில் இயக்குநர் திரு ஆபாவாணன் அவர்கள் கலந்து கொண்டு பேசினார். திரைப்படக் கல்லூரி முதல்வர் திரு எம். பாலசுப்பிரமணியம் அவர்கள் கல்லூரியின் ஆண்டு அறிக்கையைப் படித்தார்.

விழாவில், நடிகை ஹீரா கலந்துகொண்டு தி ஆப்ட் டிவி. நிறுவனம் வழங்கிய விருதை, திரைப்படக் கல்லூரி இயக்குநர் திரு பிரவின் குமார், ஒளிப்பதிவாளர் திரு சுஜிலால், எடிட்டர் திரு கோபாலகிருஷ்ணன், ஒலி அமைப்பாளர், திரு சத்தியமூர்த்தி, பிராசசிங், திரு சுந்தரமூர்த்தி ஆகியோருக்கு வழங்கிப் பாராட்டினார்.

விழாவில் பட அதிபர் திரு கே.ஆர். அவர்கள் (கோதண்டராமன்) கலந்து கொண்டு பேசுகையில், "1975-ஆம் ஆண்டு முதல் எத்தனை முதலமைச்சர்கள் கலைத் துறையில் இருந்து வந்தாலும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதாதான் திரைப்பட நகரம் அமைத்து, கலைஞர்களுக்கு வீடு கட்ட இலவசமாக நிலம் ஒதுக்கி, சாதனை படைத்திருக்கிறார். அவருக்குப் பாராட்டு தெரிவித்துக் கொள்கிறேன்" என்றார்.

திரைப்படக் கல்லூரியின் ஆண்டு விழா மலரை இயக்குநர் திரு ஆர்.வி. உதயகுமார் அவர்கள் வெளியிட, அதை, ஜெயலலிதா திரைப்பட நகரத்தின் நிர்வாக இயக்குநர் திரு பி. மாதவன் அவர்கள் பெற்றுக் கொண்டார். முடிவில் திரு வி. சிவக்குமார் அவர்கள் நன்றி கூறினார்.

---

**உ**ரிமையை அடையத் துடிக்கின்ற மானிடன் அறிவை அடைய அடிமையாகி விடக் கூடாது. உடற்பயிற்சியைக் கட்டாயத் துடன் பயிலவேண்டும். இதனால் உடலுக்குத் தீமை ஏற்படாது. அறிவைக் கட்டாயமாக நுழைத்தால் நினைவில் நிற்காது போகும்.

**—சாக்ரடீஸ்**

**ம**க்கள் சுய சுதந்திரம் ஏதுமின்றி இயந்திரம் போன்று வாழ்கின்ற வாழ்வால் எவ்வாறான சமூகப் பயனும் விளையப் போவது கிடையாது.

**—பெர்ட்ராண்டு ரஸ்ஸல்**



# ஏர்க்காட்டில் எழில்மிகு கோடை விழா!

சேலம் மாவட்டம் ஏர்க்காட்டில் 20-வது கோடை விழா மலர்க் கண்காட்சி 14.5.95 அன்று தொடங்கியது. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு டி.எம். செல்வகணபதி அவர்கள் கோடை விழாவையும், 20-வது மலர்க் கண்காட்சியையும் தொடங்கிவைத்தார். இந்நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சியர் திரு பி.கே. பிரசாத், இ.ஆ.ப., அவர்கள் தலைமை தாங்கினார். ஏர்க்காடு சட்டமன்ற உறுப்பினர் திரு.சி. பெருமாள் அவர்கள் முன்னிலை வகித்தார். கூடுதல் மாவட்ட ஆட்சித் தலைவர் (வளர்ச்சி) திரு பி. சோனை, இ.ஆ.ப., வரவேற்றுப் பேசினார். சட்டமன்ற உறுப்பினர்கள், திரு க. அர்ச்சுணன், திரு அன்பழகன், திருமதி டாக்டர் சரோஜா, திருமதி சுந்தராம்பாள் ஆகியோர் வாழ்த்திப் பேசினார்கள்.

குத்துவிளக்கேற்றிவைத்தும் கோடை விழாவைத் தொடங்கிவைத்தும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது:

"ஏர்க்காட்டில் கோடை விழா மலர்க்கண்காட்சி தொடங்கி வைப்பது ஆண்டுதோறும் நடந்து வருகிறது. அதேபோல் இந்த ஆண்டும் இன்று மலர்க்கண்காட்சி தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. கண்கொள்ளாக் காட்சியாக மலர்க்கண்காட்சி அமைந்துள்ளது. இது தொடர்ந்து நடைபெறும்.

"இந்த மாவட்டத்திற்குப் பக்கத்தில் உள்ளவர்கள் ஏர்க்காடு மலையின் எழிலைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவும், இந்தப் பேரூராட்சி முக்கியமாக விளங்க வேண்டும் என்றும் இந்த விழா நடத்தப்படுகிறது. ஏர்க்காடு நகரில் எழில் கொஞ்சும் ஏரிக்குத் தனிச் சிறப்பு உண்டு.

“ஏர்க்காட்டை அழகுப்படுத்த ரூ.50 இலட்சம் அரசு சார்பில் செலவழிக்கப்பட்டுள்ளது. சாலைகள் மேம்பாட்டுக்கு ரூ.12 இலட்சமும், பஸ் நிலையத்தில் கழிப்பிட வசதிக்கு ரூ.3.50 இலட்சமும், சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் அண்ணா பூங்காவை அழகுபடுத்த ரூ.20 இலட்சமும், லேடீஸ் சீட்டை அழகுபடுத்த ரூ.3.50 இலட்சமும், ஏரியைச் சுற்றி வண்ண விளக்குகள் அமைக்க ரூ.1.90 இலட்சமும் உட்பட ரூ.50 இலட்சம் ஏர்க்காடு வளர்ச்சிக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

“இங்கு பேசியவர்கள் சுற்றுலாப் பயணிகள், ஊட்டி, கொடைக்கானல், ஆகிய பகுதிகளுக்குத்தான் அதிகம் செல்கிறார்கள். ஏர்க்காட்டிற்கு அதிகமாக வருவதில்லை என்றார்கள். இந்தக்குறைகளைப் போக்கவும், சுற்றுலாப் பயணிகள் வருவதற்காகவும் தான் இங்கு ரூ.50 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. இங்கு நாம் பல்வேறு பணிகளைச் செய்து முடித்துள்ளோம்.

“ஏர்க்காட்டை முழுமையான சுற்றுலா மையமாக்கும் விதத்தில் சிறுவர்களுக்கான பூங்கா அமைக்கும் திட்டத்தை உருவாக்கி, அரசுக்கு அனுப்புங்கள் என மாவட்ட ஆட்சியருக்குத் தெரிவித்துள்ளேன். சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் உல்லாச ரெயில், மிருகக்காட்சிச் சாலை போன்றவைகள் அமைக்கப்படும்.

“ஏர்க்காடு ஏரியில் அசுத்த நீர் கலக்கிறது எனப் புகார்கள் சொன்னார்கள். இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்படும் முன்பு எல்லாம் இங்கு சினிமாப் படப்பிடிப்பு அதிகமாக நடந்தது. இப்பொழுது கோபி, பவானி, போன்ற இடங்களுக்குச் செல்கிறார்கள். ஏர்க்காட்டிற்கு வருவதில்லை என்று கவலை தெரிவித்தார்கள்.

“எனவே, ஏர்க்காடு பெரிய சுற்றுலா மையமாக உருவாக்கப்படும். முன்பு போலவே ஏர்க்காட்டில் படப்பிடிப்பு நடத்தும் வகையில் அழகுபடுத்தப்படும்”.

விழாவில் நாள்தோறும் பல்வேறு கலை நிகழ்ச்சிகள், போட்டிகள், கருத்தரங்கு, பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. அத்துடன் திரைப்படம், அனைத்துத் துறை சார்பில் அரசின் திட்டங்கள், சாதனைகளை விளக்கும் கண்காட்சி அரங்கம், ஆகியவை அனைவரையும் கவர்ந்தன.

படகு அலங்கார அணிவகுப்பு, கோ ஆப்டெக்சின் ஆடை அலங்கார அணி வகுப்பு, படகுப் போட்டி, ஆகியவைகளும் நடத்தப்பட்டன. வெற்றிபெற்ற அனைவருக்கும் 21.5.95 அன்று நடந்த நிறைவு நாள் விழாவில், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு பி.கே. பிரசாத், இ.ஆ.ப., அவர்கள் பரிசுகளை வழங்கிப் பாராட்டினார்.

**எஸ். நாகராசன்**
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
சேலம் மாவட்டம்



☆ நாம் உரிமைகளைப் போராடிப் பெறுவதற்கு, ஒற்றுமையுடனும், மன உறுதியுடனும், பலத்துடனும் இருக்க வேண்டும். உங்கள் பங்கை நிறை வேற்ற உறுதியுடன் சத்தியம் செய் யுங்கள். நம் பக்கம் நியாயம் இருக் கும்போது நாம் தோல்வியடையவே முடியாது.

# தமிழகத்திலேயே முதன்முறையாக வடஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டத்தில் குழந்தை உழைப்பாளர் குறித்து கணக்கெடுப்பு!

**த**மிழகத்திலேயே குழந்தை உழைப்பாளர்கள் குறித்துப் பல விவரங்களைத் திரட்டும் கணக்கெடுப்புப் பணி முதன்முறையாக வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டத்தில் நடைபெற்றது. தமிழக அரசின் தொழிலாளர் நலத் துறைச் செயலர் திரு பி. சங்கர், இ.ஆ.ப., அவர்கள் தமிழ்ப் புத்தாண்டு நாளான **14.4.95** அன்று காட்பாடி ஒன்றியத்திலுள்ள காசிக்குட்டைப் பகுதியில் கணக்கெடுப்புப் பணியினைத் தொடங்கிவைத்தார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் திரு ம.ப. விஜயகுமார், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்தக் குழந்தை உழைப்பாளர் கணக்கெடுப்புப் பணியில் மாவட்டம் முழுவதும் 10,000 கணக்கெடுப்பாளர்கள் ஈடுபடுத்தப்பட்டனர். அறிவொளித் தொண்டு நிறுவனங்கள், அரசு அலுவலர்கள் ஆகியோர் முழு வீச்சில் இந்தக் கணக்கெடுப்பில் ஈடுபட்டனர்.

வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டத்தில் பீடித் தொழில் மற்றும் தீப்பெட்டித் தொழிலில் ஈடுபட்டுள்ள குழந்தை உழைப்பாளர்களை மீட்டுப் பள்ளிக்கு அனுப்பிவைக்க வேண்டும் என்ற அடிப்படையில் அவர்களைப் பற்றி முழு விவரமும் சேகரிக்க முடிவு செய்யப்பட்டது. இதன் அடிப்படையில் இம் மாவட்டத்திலுள்ள காட்பாடி, வேலூர், அணைக்கட்டு, கே.வி. குப்பம், குடியாத்தம், மாதனூர், பேரணாம்பட்டு, ஆலங்காயம், ஜோலார்ப்பேட்டை, நாட்றாம் பள்ளி, திருப்பத்தூர், கந்திலி, ஆகிய 12 ஊராட்சி ஒன்றியங்களில் இந்தக் கணக்கெடுப்புகளை நடத்தவும், குழந்தை உழைப்பாளர்கள்குறித்துப்பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் கலை நிகழ்ச்சிகள், மனிதச் சங்கிலி, ஊர்வலங்கள், சைக்கிள் பேரணிகள் தொடர்ந்து நடைபெற்று வந்தன.

ஒரு ஒன்றியத்திற்கு ஒரு கலைக்குழு வீதம் 12 ஒன்றியங்களுக்கும் கலைக்குழுக்கள் நியமிக்கப்பட்டு குழந்தைத் தொழிலாளர்கள் அவல நிலைகள் பாடல்கள், நாடகங்கள் மூலம் விளக்கப்பட்டது. அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் சைக்கிள் பேரணியும் நடத்தப்பட்டது. கூடுதல் ஆட்சியர் திரு விபுநய்யார், இ.ஆ.ப., அவர்கள் சைக்கிள் பேரணிக்குத் தலைமை தாங்கினார். கல்புதூர், செங்குட்டை, காட்பாடி, தாராடபவேடு, காந்தி நகர் ஆகிய பகுதிகளில் பல கி.மீ. தூரம் சைக்கிளில் சென்று பிரச்சாரம் செய்தார். மாவட்டத்தின் பல்வேறு இடங்களிலும் செய்தித்தாள்கள், சுவரெழுத்துக்கள், போஸ்டர்கள், பேனர்கள், மற்றும் வாகனங்கள் மூலம் குழந்தை உழைப்பாளர்கள் நிலை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

**10.4.95** அன்று மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் வேலூர் கோட்டை மைதானத்திலிருந்து மாபெரும் குழந்தைத் தொழிலாளர்கள் விழிப்புணர்ச்சி ஊர்வலத்தினைக் காவல்துறை துணைத்தலைவர் திரு ஆர்.வி. கோபாலன், இ.கா.ப., அவர்கள் கொடியசைத்துத் துவக்கி வைத்தார். ஊர்வலத்தின் முடிவில் குழந்தைத் தொழிலாளர் கணக்கெடுப்புப் படிவத்தினை வேலூர் சி.எம்.சி. மருத்துவமனை இயக்குநர் டாக்டர் வி.ஐ.மாத்தன் அவர்கள் வெளியிட, அறிவொளி இயக்க மாவட்ட ஒருங்கிணைப்பாளர் திரு செந்தமிழ்ச் செல்வன்

அவர்கள் பெற்றுக்கொண்டார். பின்னர், குழந்தைத் தொழிலாளர் நல்வாழ்வு இயக்கத்தின் சின்னத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வெளியிட்டார்.

இவை அனைத்திற்கும் முத்தாய்ப்பாக, தமிழ்ப்புத்தாண்டு நாளான **14.4.95** அன்று காட்பாடி ஒன்றியத்திலுள்ள காசிக்குட்டைப் பகுதியில் தமிழக அரசின் தொழிலாளர் துறைச் செயலாளர் திரு பி. சங்கர், இ.ஆ.ப., அவர்கள் குழந்தைத் தொழிலாளர்கள் குறித்த கணக்கெடுப்பினைத் துவக்கி வைத்தார். மாவட்ட ஆட்சித் தலைவர் திரு ம.ப. விஜயகுமார், இ.ஆ.ப., அவர்களுடன் கூடுதல் ஆட்சியர்கள் திரு விபுநய்யர், இ.ஆ.ப., திரு சிவ்தாஸ்மீனா, இ.ஆ.ப., இந்தியக் குழந்தைகள் நலச்சங்கச் செயலாளர் திருமதி திலகவதி ராமையா, யுனிசெப் பிரதிநிதி திரு வித்யாசாகர் ஆகியோர் பங்கேற்றனர். மாவட்டத்தில் மொத்தம் 3 இலட்சம் வீடுகளில் இந்தக் கணக்கெடுப்பு நடைபெற்றது.

தொழிலாளர் துறைச் செயலர் திரு பி. சங்கர், இ.ஆ.ப., அவர்கள் செய்தியாளர்களிடையே பேசும்போது, "தமிழ் நாட்டிலேயே முதன்முறையாகக் குழந்தைத் தொழிலாளர் பற்றிய கணக்கெடுப்பு இம் மாவட்டத்தில் நடைபெறுகிறது. உடல்நலத்தைப் பாதிக்கக்கூடிய தொழில்களில் ஈடுபட்டுள்ள குழந்தைத் தொழிலாளர்கள் முதலில் அடையாளங்கண்டு எண்ணிக்கையைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும். இதற்காக மாநில அளவிலான குழந்தைத் தொழிலாளர்கள் ஆலோசனைக் குழுவும், குழந்தைத் தொழிலாளர்கள் குழுமமும் அமைக்கப்பட்டுள்ளன. அரசு அலுவலர்கள், தொழில் அதிபர்கள், தொழிலாளர் பிரதிநிதிகள் இதில் உறுப்பினர்களாக இருப்பர். இம் மாவட்டத்தில் குழந்தைத் தொழிலாளர்கள் கணக்கெடுப்பு மக்களிடையே விழிப்புணர்ச்சி ஊட்டியுள்ளது. வட ஆர்க்காடு அம்பேத்கர் மற்றும் காமராசர் மாவட்டங்களில் குழந்தைத் தொழிலாளர்கள் நிலைமை குறித்து அரசு எடுத்த நடவடிக்கையை மத்திய மனித உரிமைக்குழு பாராட்டி இருக்கிறது. பொருளாதாரத் தேவைக்காகப் பெற்றோர்கள் குழந்தைகளைச் சுரண்டுவது மிகவும் வேதனை அளிக்கிறது. குழந்தைத் தொழிலிலிருந்து விடுவிக்கப்படும் குழந்தைத் தொழிலாளர்கள் குடும்பங்களுக்கு வருவாய் ஈட்டுவதற்காக அரசு வழங்கும் நிதியுதவியினைச் சரியான முறையில் பயன்படுத்தி முன்னேற வேண்டும். குழந்தைகளைக் கட்டாயம் பள்ளிக்கு அனுப்பிப் படிக்க வைக்க வேண்டும்" என்று குறிப்பிட்டார்.

**குழந்தைத் தொழிலாளர்கள் மற்றும் பெற்றோரிடம் நேரடிப் பேட்டி:**

காசிக்குட்டைப் பகுதியில் வசிக்கும் திரு குமார் திருமதி புஷ்பா ஆகிய தம்பதியினர் தங்களது 8 வயது மகனான ராஜா என்பவனை ரூ.2000 க்கு அடகு வைத்திருந்தார்கள். அவர்களை நேரில் கண்டு விசாரித்த போது, கடந்த ஓராண்டுக் காலமாகத் தங்கள் மகன் ராஜாவைப் பீடித் தொழில் ஏஜென்ட்டிடம் அடகு வைத்ததாகவும், தங்கள் உடல்நிலை மிகவும் மோசமாக இருந்ததால் வீட்டில் சாப்பாட்டிற்கு மிகவும் கஷ்டப்பட்டதாகவும் வறுமையின் காரணமாக வேறு வழியில்லாமல் தங்கள் மகனைப் பீடி வேலைக்கு அனுப்பி வைத்ததாகவும் குறிப்பிட்டார். ராஜா என்ற அந்தச்சிறுவனை மாவட்ட நிர்வாகம் மீட்டு, பெற்றோரிடம் ஒப்படைத்துள்ளது. தற்போது அந்தச் சிறுவன் இந்தியக் குழந்தைகள் நலச் சங்கத்தின் மூலம் நடத்தப்படும் பள்ளியில் படித்து வருகிறான். இனிமேல் தனது குழந்தையை இந்தப் பீடித் தொழிலுக்கு அனுப்ப மாட்டோம்; என்றும் தொடர்ந்து பள்ளிக்கு அனுப்பி வைப்போம்" என்று குறிப்பிட்டனர்.

திருமதி பாஞ்சாலை அம்மாள் அவர்கள் வத்சலா என்ற தனது 10 வயது மகளை, பீடித் தொழிலில் ஒரு ஏஜென்ட்டிடம் ரூ.5,000க்கு அடகு வைத்திருந்தார். மாவட்ட நிர்வாகம் மூலம் குழந்தைத் தொழி

★ என் நாட்டு மக்கள் மனிதர்களை விட, நாடு பெரியது என்பதை என்றாவது ஒரு நாளைக்குத் தெரிந்து கொள்ள வேண்டும்.

–டாக்டர் அம்பேத்கர்

★ சமூகச் சீர்திருத்தமே தாழ்த்தப்பட்டவர்க்குச் சகல நன்மைகளையும் தரும்.

—டாக்டர் அம்பேத்கர்

லர்ளர்கள் விழிப்புணர்ச்சி குறித்து, பல்வேறு வகைகளில் பொது மக்களிடம் எடுத்துச் சொல்லப்பட்டது. குழந்தைத் தொழிலாளர்கள் ஒழிப்புத் திட்டத்தின் கீழ் செல்வி வத்சலா என்ற பெண் மீட்கப்பட்டு பள்ளிக்கு அனுப்பப்பட்டு வருகிறாள். செல்வி வத்சலா என்ற பெண்ணின் தாயார் திருமதி பாஞ்சாலை கூறும்போது, "பீடித் தொழிலில் அடகு வைத்த எனது பெண்ணை அரசாங்கம் மீட்டுக் கொடுத்ததுடன் எங்கள் குடும்பத்தில் வருமானத்தைப் பெருக்க ரூ.12,000 செலவில் கறவை மாடு வழங்கியுள்ளது. இதில் மானியத்தொகை ரூ.4,000 போக மீதித் தொகையை நாங்கள் கட்டினாலே போதும். கறவை மாட்டின் மூலம் ஒரு நாளைக்கு, காலை மாலை இருவேளையும் சேர்த்து 13 லிட்டர் பாலை சேனூர் கூட்டுறவுச் சங்கத்திற்கு ஊற்றுகிறோம். தற்போது பால் கொள்முதல் விலையும் உயர்த்தப்பட்டுள்ளதால், எங்களது குடும்பச் செலவிற்குப்போதுமான அளவு பணம் கிடைக்கிறது. இதனைக் கொண்டும் குடும்பத்தை நடத்தி வருகிறோம். இனி எக்காரணம் கொண்டும் பீடித் தொழிலுக்குக் குழந்தைகளை அனுப்ப மாட்டோம்" என்று உறுதிமொழி கூறினார்.

காசிக்குட்டைப் பகுதியைச் சேர்ந்த திரு கொல்லாபுரி என்பவர் லட்சுமி என்ற 9 வயதுள்ள சிறுமியை ரூ.2,300 க்கு ஒரு ஏஜென்ட்டிடம் அடகு வைத்திருந்தார். அரசு நடவடிக்கை காரணமாக, பீடித் தொழிலில் அடமானம் வைக்கப்பட்ட அந்தச் சிறுமி மீட்கப்பட்டு தற்போது பள்ளிக்குச் சென்று வருகிறாள்.

சிறுமியின் தந்தை திரு கொல்லாபுரி கூறுகிறார்: "நான் பீடி சுற்றும் தொழில் செய்து வருகிறேன். கடந்த சில ஆண்டுகளாக உடல் நலமின்மை காரணமாக வீட்டில் வருமானத்திற்கு வழியில்லாமல் இருந்தது. எனவே, கடந்த ஒன்றறை ஆண்டுக்காலமாக எனது மகளைப் பீடித் தொழிலுக்கு அனுப்பிவைக்கிறேன். கலெக்டர் போன்ற உயர் அதிகாரிகள் வந்து குழந்தைகளை அடமானம் வைப்பதும், வேலைக்கு அனுப்புவதும் குற்றம் என்று கூறியதாலும், அறிவொளி இயக்கத்தில் குழந்தைத் தொழிலாளர் குறித்து விளக்கியதாலும், நான் எனது குழந்தையைப் பீடித் தொழிலுக்கு அனுப்புவதை நிறுத்தி விட்டேன். குழந்தை அடமானம் சட்டப்படி குற்றம். அடமானப் பணத்தை திருப்பித் தர தேவை இல்லை என்று தெரிந்தபின் குழந்தையைத் தொடர்ந்து பள்ளிக்கு அனுப்பி வைக்கிறேன்" என்று குறிப்பிட்டார். மேலும் "அடமானப் பணத்தை திருப்பி செலுத்தாததால் குழந்தையை மீண்டும் பீடித் தொழிலுக்கு வந்து கூப்பிட்டால் அரசிடம் புகார் செய்வோம். நான் ரேடியோ கடை வைக்க லோன் கேட்டு மனுகொடுத்துள்ளேன். லோன் கிடைத்ததும் நான் சொந்தமாகத் தொழில் தொடங்குவேன்" என்றார்.

சரசுவதி என்ற 13 வயது மகளை அடகு வைத்திருந்த அவளது தந்தை திரு முருகேசன் கீழ்க்கண்டவாறு கூறுகிறார்:

"நான் சரசுவதி (வயது 13) என்ற மகளை ரூ.3,000 க்கும், சிவமூர்த்தி (வயது 11) என்ற மகனை ரூ.900-க்கும் பீடித் தொழில் ஏஜென்ட் ஒருவரிடம் அடகு வைத்திருந்தேன். சரசுவதி 7 ஆண்டுகளாகப் பீடி சுற்றும் தொழில் கவனித்தாள். மகன் சிவமூர்த்தி பள்ளி செல்லும் நேரம் தவிர மற்ற நேரங்களில் பீடி சுற்றச் சென்று விடுவான். தற்போது அரசு எனது குடும்பத்தை மீட்டுள்ளது. இனி எங்களது குழந்தைகளைக் கட்டாயமாக வேலைக்கு அனுப்பமாட்டோம். அரசு கொடுத்துள்ள கறவை மாடுகளை நன்கு பராமரித்து, குடும்பத்தைக் கவனித்துக் கொள்வோம்" என்றார்.

அடகு வைக்கப்பட்ட சிறுமி சரசுவதி கூறும்போது, "எங்களுக்கு விவரம் தெரியும்முன் அடகு வைத்து விடுவதால் எங்களுக்கு ஒன்றும் தெரிவதில்லை.

ஒரு நாளைக்கு, குறைந்தது 2,000 பீடி சுற்றுமாறு அடகுக்குப் பணம் கொடுத்தவர்கள் வற்புறுத்துவார்கள். பீடி சுற்றுவது குறைந்துவிட்டால் அடிப்பார்கள். வீட்டிற்குச் சாப்பாட்டிற்கு அனுப்ப மாட்டார்கள். பெற்றோரிடம் சொன்னால் மீண்டும் எங்களுக்கு அடகு பிடித்தவரிடமிருந்து அடி விழும். எனவே, நாங்கள் வெளியே எதையும் சொல்லாமல் பீடி சுற்றிவிட்டு வந்துவிடுவோம். எனக்குப் படிப்பதற்கு ஆர்வம் இருந்தாலும் எங்களைப் பள்ளிக்கு அனுப்பாமல் இருந்துவிட்டார்கள்" என்று சோகமாகக் குறிப்பிட்டாள்.

பொதுவாகப் பெண் குழந்தைகளை அதிக அளவில் பீடி சுற்ற அடகு வைத்தது தெரிய வருகிறது. ஆண் குழந்தைகளை ஒரளவு பள்ளிக்கு அனுப்பி வைப்பதும் வெளிப்படையாக உள்ளது. கறவை மாடுகள் பெற்றவர்கள் குறிப்பிடும் ஒரு பொதுவான குறைபாடு என்னவென்றால் கறவை மாடுகளை ஒரு குறிப்பிட்ட நபர் தொடர்ந்து கறந்தால் பால் சரியான அளவில் சுரக்கும், ஒவ்வொரு வேளைக்கும் ஆள் மாற்றி மாற்றி கறப்பதால் கைப்பழக்கத்தின் காரணமாகச் சரியான முறையில் பால் சுரப்பதில்லை என்று குறிப்பிட்டார்கள்.

இவர்களது நலனை முன்னிட்டு வேலூர் பால் கூட்டுறவுச் சங்கத்தின் கிளை ஒன்று காசிக் குட்டைப் பகுதியில் இயங்கி வருகிறது.

தமிழக அரசு எடுத்துவரும் இந்தச் சீரிய நடவடிக்கையினால் பல நூற்றுக்கணக்கான அடகு வைக்கப்பட்ட குடும்பங்கள் மீட்கப்பட்டன. மாவட்டம் முழுவதும் ஒரு வித விழிப்புணர்ச்சி ஏற்பட்டுள்ளதைக் கண்கூடாகக் காணமுடிந்தது.

**லோ. கிருஷ்ணமூர்த்தி**
உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி)
வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டம்.

# கல்வி சிறந்த கோவையிலே...

*கோயம்புத்தூர் மாவட்டத்தில் – முதன்முதல் 1859-இல், பொள்ளாச்சியிலேதான் மக்கள் நன்கொடை மூலம் ஒரு பள்ளிக்கூடம் துவக்கப்பட்டது. அடுத்த ஐந்தாண்டில் இன்னும் 7 பள்ளிகள் கட்டப்பட்டு, போதுமான மாணவர்கள் சேராததால் அவற்றில் ஐந்து மூடப்பட்டன.*

*1868-69-இல், கோவை ஆங்கிலோ வெர்ணாகுலர் பள்ளி இரண்டாம் நிலைக் கல்லூரியாக உயர்த்தப்பட்டது.*

*இப்போதோ – சென்னைக்கு அடுத்தபடியாகக் கோயம்புத்தூர் மாவட்டத்திலேதான் கல்வி நிலையங்கள் அதிக எண்ணிக்கையில் உள்ளன. குறிப்பாக – தொடக்கக் கல்வி உயர்நிலைப்பள்ளிக் கல்வியைவிட, பல்கலைக்கழகக் கல்வியும், தொழிற்கல்வியும் பெரிதும் மேம்பாடு அடைந்திருக்கின்றன.*

*பாரதியார் பல்கலைக்கழகம், நிர்மலா மகளிர் கல்லூரி, ஜி.வி.ஜி. விசாலாட்சி மகளிர் கல்லூரி, பி.எஸ்.ஜி. கலைக்கல்லூரி, அரசினர் பெண்கள் பயிற்சிக் கல்லூரி, காலேஜ் ஆஃப் டெக்னாலஜி – கோயம்புத்தூர், இராமகிருஷ்ணா மிஷன் வித்யாலாயா ஆசிரியர் கல்லூரி, அரசு மருத்துவக் கல்லூரி, அவினாசிலிங்கம் மகளிர் மனைஇயல் பல்கலைக்கழகம், தவத்திரு சாந்தலிங்க அடிகளார் தமிழ்க் கல்லூரி, விவசாயக் கல்லூரி மற்றும் விவசாய ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு அரசு வேளாண்மைப் பல்கலைக் கழகம் ஆகியவை அவற்றுள் குறிப்பிடத்தக்கவைகளாகும்.*

# 3 மாவட்டங்களில் 100 சிறப்புக் காவல் அலுவலர்கள் நியமனம்

## –மாண்புமிகு முதல்வர் ஆணை



கடந்த 1994-ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற காவல்துறை அதிகாரிகளின் மாநாட்டில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், தகுதியுள்ள வேலையற்ற இளைஞர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்குத் தேவையான பயிற்சி அளித்து, சிறப்புக் காவல் அலுவலர்களாக நியமிக்கப்படுவார்கள் என்று அறிவித்தார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினையொட்டி, தமிழகக் காவல் துறை, தற்போது சென்னை நகரம், செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். (கிழக்கு), செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். (மேற்கு) காவல் மாவட்டங்கள் ஆகிய இடங்களில் மட்டும் 10 இலட்சம் ரூபாய் செலவில், 100 சிறப்புக் காவல் அலுவலர்களை நியமிக்கச் செயற்குறிப்பு ஒன்றைத் தயார் செய்தது. இந்தச் செயற்குறிப்பை ஆய்வு செய்த, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், மேற்கண்ட 3 மாவட்டங்களிலும், 10 இலட்சம் ரூபாய் செலவில் 100 காவல் அலுவலர்களை நியமிக்க- தக்க ஆணைகளைப் பிறப்பித்துள்ளார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி சிறப்புக் காவல் அலுவலர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுபவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 750 ரூபாய் மதிப்பூதியம் வழங்கப்படும். இந்தச் சிறப்புக் காவல் அலுவலர்கள், 1 ரோந்துப் பணி (Patrolling) (2) பாதுகாப்புப் பணி (Bandobust) (3) போக்குவரத்துக் கட்டுப்பாட்டுப் பணி (Traffic Regulations) ஆகிய பணிகளில் மட்டுமே ஈடுபடுத்தப்படுவார்கள். இவர்கள் பகுதி நேர அரசு ஊழியர்களாக மட்டுமே கருதப்படுவார்கள். தற்காலிக அடிப்படையில் நியமிக்கப்படும் இந்த 100 சிறப்புக் காவல் அலுவலர்களுக்குத் தேவையான சீருடைகளும், காலணிகளும் மற்றும் தேவையான உபகரணங்களும் இலவசமாக வழங்க வேண்டும் என்றும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

**அறிவாலும் ஆற்றலாலும் ஆகாத காரியம் இல்லை. அறிவும் ஆற்றலும் சேர்ந்து உழைத்தால் வெற்றி நிச்சயமாகக் கிடைக்கும்.**

**- அறிஞர் அண்ணா**

TNGST No.2/02/10 264706 PHONE: 700534, 700535, 700536

CST No.313647 Dt.27.5.82 RESI: 24535

# CITY ELECTRICALS

*Dealers in: ALL KINDS OF ELECTRICAL AND HARDWARES*

**52.Kumaran Road * TIRUPPUR-641 601**

எங்கள் இதய தெய்வம்

மாண்புமிகு தமிழக முதல்வர்

புரட்சித்தலைவி

டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள்

ஆட்சியில்,

தங்கத் தமிழகம் சிறந்து முன்னேற

அனைத்து இந்திய நாட்டிலும்

சாதனை புரிய,

எங்கள் இதயம் கனிந்த நல்வாழ்த்துக்களைக்

காணிக்கையாக்குகிறோம்!

# இந்த அரசால் எதுவும் முடியும்

## இயக்குநர் பாரதிராஜா

'என் இனிய தமிழ் மக்களே', அனைவருக்கும் என்னுடைய வணக்கம்.

முதலில் நான் ஒன்று சொல்லிக்கொள்ள வேண்டும். எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டில் பாரதிராஜா என்பதை நான் நினைத்து, நினைத்துப் பார்க்கிறேன். அந்த வியப்பை என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. எனக்கும் 14 ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு சிறப்புக் கிடைத்தது. 'அலைகள் ஓய்வதில்லை' என்ற ஒரு படத்தைத் தயாரித்ததற்காகப் பொன்மனச் செம்மல், மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்கள் இதயத்தில் இடம் பிடித்த எனக்கு, ஒரு சமூக அங்கீகாரம் வாங்கிக் கொடுத்த அந்தப் பெருந்தகைக்குப் பிறகு, 14 ஆண்டுகளுக்குப் பின்னால் இந்த 8வது உலகத் தமிழ் மாநாட்டில் எனக்கு, இந்தப் பாமரனுக்கு ஒரு சமூக அங்கீகாரம் கொடுத்த தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களே நன்றி, வணக்கம்.

எனக்கு ஒரு சிறிய தகுதி இருக்கிறது. அந்தக் கடலில் ஒரு சிறங்கைத் தண்ணீரையாவது முகர்ந்து நான் அருந்தியிருக்கிறேன் என்ற ஒரு தகுதியிருக்கிறது. சிறங்கை அளவு தண்ணீரைத்தான் முகர்ந்திருக்கிறேன். இன்னும் அதனுடைய ஆழம் அகலம் மற்றும் பரிமாணம் தெரியாதவன்தான் இந்த பாரதிராஜா.

இங்கு பேசியவர்கள் திரையுலகத்தைக் கடைசியாக ஒரு இடி இடித்து விட்டுத்தான் சென்றார்கள். அது எல்லோருக்கும் பொதுவாக ஒரு சுகமான விஷயம்தான். முனைவர் சிவகாமசுந்தரி அவர்கள் மிகவும் அழகாகப் பேசினார்கள். எனக்குக் கொடுத்த தலைப்பு 'இயற்கை' என்று கூறி, இயற்கையை எந்த அளவுக்கு அவர்கள் நேசிக்கிறார்கள் என்பதைத் தெரிவித்து, இந்த நாட்டில் நடக்கக்கூடிய வக்கிரங்கள், வேகங்கள், குரோதங்கள் பற்றி எல்லாம் சொல்லிவிட்டு கடைசியாகக் காதலைப் பற்றியும் சொன்னார்கள்.

காதலைப் பற்றிச் சொல்லிவிட்டு என்னையும்ஒரு பார்வை பார்த்தார்கள் என்று நினைக்கிறேன். அப்போது பக்கத்திலே இருக்கிற அத்தனைப் பேரும் என்னைப் பார்த்தார்கள். காரணம் - ஏதோ காதலுக்குச் சொந்தக்காரன் பாரதிராஜா என்பதுபோல் பார்த்தார்கள். அதை நான், இல்லை என்று சொல்லவில்லை.

ஆம். இந்த மக்களின் காதலுக்கு நான் சொந்தக்காரன். அவர்கள் பேசியதற்குப் பின்னால் பேசிய நாடகப் பேராசிரியர் பெருமாள் அவர்கள் காலம் விரைந்து போய்க் கொண்டிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். திருக்குறளில் வருவது போல, 'நான் நோக்கும் போது அவள் நிலம் நோக்க, நான் நோக்காக்கால் அவள் நோக்க' என்பது போலெல்லாம் படம் பிடிக்க வேண்டும்



பாய்ந்தோடும் நீர் வெள்ளத்தைத் தேக்கிப் பாய்ச்சினால்தான் பலன் காண முடியும். காட்டாறு பயிரை வளர்க்காது. கட்டுப்பாடு இல்லாத வாழ்வும், அணைக்கட்டு இல்லாத வெள்ளமும் ஆபத்துத்தான்.

-பேரறிஞர் அண்ணா

என்றார். இப்போதெல்லாம் அவள் நோக்குவதற்கு முன்னாலே கதையே முடிந்து விடுகிறது.

அவன் பார்த்தான், அவள் பார்த்தாள்; 'அவன் பார்த்தான், அவள் பார்த்தாள்' எனச் சொல்லும்போதே, "பார்த்துக் கொண்டே இருந்தால் எப்படி, எப்போது பேசப்போகிறாய்?" என்று கேட்கிறார்கள்.

நானும் சில திரைப்படம் எடுத்திருக்கிறேன். 'புதிய வார்ப்புகள்' என்ற படத்தில் காதலர்கள் பார்ப்பதுபோல் காட்சி இருக்கும். அந்தப் படத்தில் கதாநாயகனும், நாயகியும், தூண் மறைவில் இருந்து பார்த்துக் கொண்டிருப்பார்கள். அப்போது ஒரு நாதஸ்வர ஓசையின் பின்னணியுடன் மறைவிலிருந்து அழகாக இலக்கிய நயத்துடன் – பார்த்தாள், மெல்ல மறைந்தாள். பார்த்தாள், மெல்ல மறைந்தாள் என்று இசையுடன் கலந்து கொடுத்திருந்தேன்.

அன்று அதைப் பார்க்கும் போது அழகாகத் தெரிந்தது. இன்று கொஞ்ச நேரம் பார்த்துக் கொண்டிருந்தாலே, 'பேசப்பா' என்கிறார்கள் கீழே இருப்பவர்கள். அது பெருமையாக, புதுமையாக இல்லை.

பழைமையை நான் குறை சொல்லவில்லை. காலம் வேகமாகப் போய்க் கொண்டிருக்கிறது. பேப்பர்களை எடுத்தால் முழுமையாகப் படிப்பதில்லை, தலைப்பு எங்கே இருக்கிறது என்று தேடிப் படித்துவிட்டுத் தூக்கி எறிந்துவிடுகிறார்கள். வேகவேகமாகப் போய்க் கொண்டிருக்கிறார்கள். அவசர அவசரமாகப் பேருந்துகளில் பயணம் செய்கிறார்கள். அடுத்து என்ன செய்ய வேண்டும் என்று ஆரவாரமாகவும், வேகமாகவும் போய்க்கொண்டிருக்கின்ற காலம் இது!

ஆயுசு நூறிலே வாழ்பவர்கள் நாம் கம்மி. ஐம்பதிலேயே முடிந்து விடுகிறது. ஆக, வேக வேகமாகவே அழிந்து கொண்டிருக்கிறோம். கலையிலும் சற்று இங்கேயும் அங்கேயும் கொஞ்சம் வேகங்கள் இருக்கலாமென்று நான் கூறிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

'காற்றினிலே வரும் கீதம்' என்பது ஒரு தேமதுரத் தமிழோசை மாதிரி. அப்படியெல்லாம் இப்போது காதிலே வந்து பாய்வது ரொம்ப அற்புதம். நான் சின்ன வயதில் கேட்டது. ஆனால், இன்று நானே பாடியிருக்கிறேன். கட்டைக் குரலில் ஒரு பாட்டுப் பாடியிருக்கிறேன். அதை ஜனங்களும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்! இப்போது அப்படியெல்லாம் 'திக்' ஆக ஒரு 'வாய்ஸ்' வேண்டுமென்று 'திங்க்' பண்ணுகிறோம். சுதிக்கும் எனக்கும் ஞானப் பிராப்தமே கிடையாது. கொஞ்சம் கூட சம்பந்தம் கிடையாது.

பாட்டை நான் பாடினால், இளையராஜா அந்தக் காலத்திலே எழுந்து காத தூரத்திற்கு ஓடுவார். நான் பேசினாலே கொஞ்சம் பயமாக இருக்கிறது என்று சொல்லுவார். நான் பாடினால் எப்படி இருக்கும்? ஆனால், இசைக்கு அது தேவையாக, இன்றைய நிலையில் அந்த இசைக் கலைஞனுக்குத் தோன்றியிருக்கிறது, என்னைப் பாட வைத்திருக்கிறார். அத்தகைய மாற்றங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. ஏனென்றால், கால மாற்றங்களை நாம் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

மரபுகளை மீறவும் கூடாது, மரபுகளைத் தொற்றிப் பிடித்துக் கொள்ளவும் கூடாது என்பதற்கு நான் உடன்படுகிறேன். சினிமா என்பது ஒரு காலத்தில் இல்லையென்றால், இந்த மாற்றங்கள் வந்திருக்கவே இருக்காது.

லாஸ் ஏஞ்சல்ஸிலே, அமெரிக்காவிலே சினிமா என்பது ஆரம்பித்த காலத்தில், படம் பிடிப்பவனைப் பில்லி சூனியக்காரனைப் போல விரட்டி விரட்டி அடித்திருக்கிறார்கள். லாஸ் ஏஞ்சல்ஸிலே, காடுகளிலே போய் மறைந்து கொண்டுதான் படம் பிடித்திருக்கிறான். பின்னாலேதான், கொஞ்சம், கொஞ்சமாகத்தான் அது வளர்ந்தது. அதற்குப் பிறகுதான், 'தாமஸ் ஆல்வா எடிச'னுக்கு நாமெல்லோரும் தலை வணங்க வேண்டும். அதுகூட மேலைநாட்டு விஷயம் தான்; இங்கே இறங்கியது.

நாம் எப்படி இருந்தோம் என்றால், இன்றைக்கும் தாய் தாலாட்டுகிறாளே - தாலாட்டும் போது ஒரு கதை சொல்லித்தான் தாலாட்டுவாள். பாட்டி, பேரப் பிள்ளையைத் தட்டிக் கொடுக் கும்போது, கதை சொல்லித்தான் தாலாட்டுவாள். கோவிலுக்குச் சென்றாலும், கதை சொல்லித் தான் காலட்சேபத்தை நிகழ்த்து வார்கள்.

பம்மல் சம்பந்த முதலியார் அவர்கள், சங்கரதாஸ் சுவாமிகள் ஆகிய இவர்கள்தான் நாடகத்திற்கு உயிர் கொடுத்த வர்கள். கொஞ்சம் வழக்கு முறைகள் மாறியது. சினிமா என்று தோன்றிய காலத்திலே, இந்த நாடகங்கள் சினிமாக் களாக மாற ஆரம்பித்தன. ஆகையினால்தான் அந்தக் காலத்திலிருந்து, சினிமாவிற்குச் சினிமா, தமிழை எடுத்துப் பார்த்தனர்; இந்த 30 ஆண்டுக் காலங்களில், மிகப் பெரிய மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

அன்றைய காலகட்டத்தில் என்ன பேசினார்கள் என்பதை நானும் பழைய பிரிண்டைப் போட்டுப் பார்த்திருக்கிறேன். "ஸ்வாமி, நாதா...ப்ரியே'' என்றெல்லாம் சமஸ்கிருதம் அதிகமாகக் கலக்கப்பட்டு, எனக்கே புரியாத விஷயங்கள் எல்லாம் இருந்த ஒரு கால கட்டம் உண்டு. ஏனென்றால், அந்தக் காலத்தில் அப்படித்தான் இருந்தது. கல்கத்தா, பம்பாய், பூனா அங்கேயெல்லாம் படம் எடுத்தார்கள்.

மெட்ராசிலே அந்தமாதிரி அப்போது படம் எடுக்கவில்லை. மெட்ராசிலே இருக்கிறவர்கள், இங்கே இருந்தவர்கள்தான் நடிகர்கள் -அங்கே போனார்கள். ஆக, தமிழ்ப் படத்தைக்கூட ஆங்கிலேயரான 'எல்லிசார் டங்கன்' எடுத்திருக்கிறார். அப்படி இருந்த தமிழ்த் திரை யுலகம், மூன்று பரிமாணங்களில் மாறியது. ஊமைப்படங்கள், அதற்குப் பின்னால் பேசும் படம், அதற்குப் பின்னால், இப்போது வண்ணப்படம். நாளை 21-ஆம் நூற்றாண்டில் என்ன வருமோ தெரியாது.

திரை சுருங்கி இருக்கிறது. சின்னத் திரை என்கிறோம். இது எந்தத் திரையாகப் போய் முடியும் என்பது நமக்குத் தெரி யாது. ஏனென்றால், இன்றைக்கு எனக்கே புரியவில்லை.

கம்ப்யூட்டரிலே இவ்வளவு விஷயங்கள் வந்துவிட்டன. நான் பெரிய சினிமா வித்துவான் என்று நினைக்கிறேன். எனக்கே தெரியாத புதிய புதிய உத்திகள் இந்தக் கலையில், புதிய பரி ணாமங்களாகத் தோன்றியிருக் கின்றன. கிட்டப்பாவின் பாட்டை ரசித்தவன் நான். பாகவதரின் பாட்டை ரசித்தவன் நான்.

அப்படி ஒரு காலகட்டத்திலே இருந்து மாறி, உரைநடை கொஞ்சம் உயிர்பெற ஆரம் பித்தது. அதற்காகத் திராவிடப் பாரம்பரியம் என்று சொல் கிறோமே, அது இந்தத் திரை உலகத்தில் ஒரு மிகப் பெரிய மாற்றத்தை, வசன நடைக்குக் கொடுத்தது. அதுவும் திராவிடப் பாரம்பரியம் என்று என்றைக் குக் கூற ஆரம்பித்தோமோ அன்றுதான் என்பதை எந்த மனிதனும், எந்தச் சபையிலும் ஒப்புக் கொண்டுதான் ஆக வேண்டும். அதன் தலையாய பெருமை, காஞ்சியில் பிறந்த அறிஞர் அண்ணா அவர் களையே சாரும்.

தஞ்சை ஒரு பெரிய புண் ணிய பூமிதான். நீங்கள் தமிழை மட்டும் வளர்க்கவில்லை. கலையை வளர்த்திருக்கிறீர்கள். ஏன் - கஞ்சி கொடுப்பதற்கு நெல்லையும் வளர்த்தீர்கள். எங்களுடைய கலைஞர் பெரு மகன் நடிகர் திலகம் சிவாஜியை யும் வளர்த்திருக்கிறீர்கள். ஏனென்றால், மேடையிலே ஏற்றம் இறக்கமாகப் பேசுவ தற்குக்கூட ஒரு மனிதன் முதன் முறையாக, 'இப்படித்தான் பேசவேண்டும், வார்த்தைகளை அடுக்க வேண்டும்' என்பதைக் கூட நாமெல்லோரும் சிவாஜி யிடமிருந்துதான் கற்றுக்கொண் டோம். தஞ்சை மண்காரர். அதற்கு நாம் இந்தத் தஞ்சை மண்ணிற்குத் தலைவணங்கக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆக, அப்படி ஒரு பரிணாமத்தில் வளர்ந்துவந்த சினிமாவில்,

உடற்பயிற்சியிலும் அறிவுப் பயிற்சியிலும் ஒன்றுபோல உற்சாகம் காண்பித்தல் அவ சியம். ஒன்றில் மட்டும் ஊக்கமாய் இருந்து விட்டு, இன்னொன்றில் சேம்பேறித்தனமாக இருத்தலாகாது.

—சாக்ரடீஸ்

☆ **"கலப்பு மணம் உலக முழுவதும் நடைபெறுதல் வேண்டும்; அதற்கென்று ஆங்காங்குள்ள தலைவர்கள் பல திற இயக்கங்களை நிறுவிக் கலப்பு மணத்தில் கருத்திருத்தல் அறம். —தமிழ்த்தென்றல் திரு.வி.க.**

முதல் படம், 'காளிதாஸ்'தான். அப்போது, நான் பிரமையோடும், மயக்கத்தோடும் பார்த்த சினிமா அது.

எனக்கு முன்னாலே பெரிய ஜாம்பவான்கள் 'ஸ்ரீதர்', பீம்சிங், பாலச்சந்தர் போன்றவர்கள் செய்யாதது இல்லை. சமூக வியலையும், மன உணர்வுகளையும், குடும்ப நிகழ்ச்சிகளையும், மனக்கிலேசங்களையும், மிக அழகாக, அற்புதமாக அவர்கள் படம்பிடித்து மக்களிடம் கண்ணீர் வர வழைத்தே, இரக்கப்பட வைத்தே ஜெயித்தார்கள். புளகாங்கிதப் படுத்துவது, பிறகு மெல்லக் கிள்ளிவிடுவது, மெல்ல அழவிட்டுப் பிறகு மெல்ல சிரிக்கவிட்டுப் படம் எடுப்பது என்பது கலையினுடைய நேர்த்தி. அதை அவர்கள் மிகவும் அழகாக, நல்ல கலவையாகவே செய்தார்கள். அதற்குப் பின்னாலே கால மாற்றம் ஏற்பட்டது.

பாரதிதாசன் அவர்கள் கூட தமிழ்ப் படங்கள் பற்றிச் சொல்லுகிறபோது நொந்து நொந்து எழுதியிருக்கிறார்.

"என் தமிழர் படம் எடுக்க ஆரம்பம் செய்தார்

எடுத்தார்கள் ஒன்றிரண்டு பத்து நூறாக,

ஒன்றேனும் தமிழ் நடையுடை பாவனைகள்

உள்ளதுவாய் அமைக்க வில்லை, உயிர் உள்ளதில்லை.

ஒன்றேனும் தமிழ் அருமை உணர்த்துவதாய் இல்லை.

ஒன்றேனும் உயர் நோக்கம் அமைந்ததாயும் இல்லை,

வடநாட்டார் போன்றே உடை, வட நாட்டார் மெட்டு,

மாத்தமிழின் நடுவினிலே தெலுங்குக் கீர்த்தனைகள்,

வடமொழியில் சுலோகங்கள்,

ஆங்கிலத்திலே பிரசங்கம்"

– என்று சொல்லுகிறார். அப்படி இருந்தது சினிமா.

'பரமசிவன் அருள் புரிய வந்து வந்து போவார்,

பதிவிரதைக்கு இன்னல் வரும், பழையபடி தீரும்'

– என்றும் அவர் சாடுவார். இப்படி சினிமா என்றால் அதனுடைய தலைப்புகளைப் பார்த்தால், 'வள்ளித் திருமணம், சத்தியவான் சாவித்திரி, பார்வதி கல்யாணம், பவளக்கொடி, சதிஅனுசூயா – அதாவது இதிகாசங்களையும், புராணங்களையும் கொண்டுவந்து மிகப் பிரமாதப்படுத்தினார்கள்.

ஆனால், எவ்வளவு பெரிய தமிழ் இலக்கியங்கள் இந்தத் தமிழ்நாட்டில் இருந்தனவோ அந்த இலக்கியங்களையும் தொட்டிருக்கிறார்கள். அங்கொன்றும், இங்கொன்றுமாக இந்த நாட்டின் கலாச்சாரப் படிவங்கள், காலப்போக்கில், அதனுடைய தடயங்கள் எல்லாம் மறைந்து போய்விடும், நம் பிள்ளைகளுக்கு நாம் அவற்றைச் சொல்லமுடியாது. அதற்காக நான் அரசாங்கத்திற்கு ஒரு வேண்டுகோள் விடுக்க இருக்கிறேன்.

இப்போது நாம் 30 ஆண்டுகளுக்கு முன்னால் பார்த்த கிராமங்கள் இல்லை. நான் என்னுடைய படங்களில் பழைய கிராமத்தின் தடயங்களை வைத்துத்தான் காட்டிக் கொண்டிருக்கிறேன். ஏனென்றால், கிராமங்களில் இப்போது 'பிரிட்ஜ்' நுழைந்துவிட்டது. டெலிவிஷன் வந்துவிட்டது. பழைய வீடுகளை இடித்துவிட்டார்கள். பொருளாதாரம் வளர்ந்துவிட்டது. அதை நான் இல்லை என்று சொல்லவில்லை. நான் பிறந்த கிராமத்தில் நான் பார்த்த கிராமத்தில் அப்போது தெருக்களில் எங்கோ ஒரு கீரைக்காரியின் சத்தம் மட்டுமே கேட்கும், ஒரு சிறிய குழந்தை மூக்கொழுகப் போய்க் கொண்டிருக்கும், ஒரு கிழவி காக்காய் விரட்டிக் கொண்டிருப்பார். அந்த மூன்று பேர்கள் தான் ஒரு தெருவின் ஜனத்தொகையாக இருப்பார்கள்.

இன்றைக்கு அங்கே போகிறேன். தெருக்களிலே நுழைய முடியவில்லை. ஜனத்தொகை கூடிவிட்டது. கட்டடங்கள் உயர்ந்து நிற்கின்றன. ஆகவே, கிராமம் என்பது 30 ஆண்டுகளுக்கு முன்னால் இப்படி இருந்திருக்கிறது என்று சொல்ல

வேண்டும்.

என் பையனிடம் சொன்னால் சிரிக்கிறான். 'சும்மா டாடி' என்கிறான். என் தாயின் மீது நான் வைத்திருக்கும் நெகிழ்ச்சி கூட அவனுக்கு அதிகமாகத் தெரிகிறது. ஓவராக அபெக்ஷன் வைத்திருக்கிறீர்களே . என்று கேட்கிறான். அபெக்ஷன் கூட அவனுக்கு ஓவராகத் தெரிகிறது. காரணம்-காலம் மாறுகிறது.

ஆக நேற்று நடந்ததை, நேற்று நடந்த வரலாற்றை எதிர்காலச் சந்ததியினர்களுக்கு வழங்குவதற்காகத் தமிழ் இலக்கிய நிகழ்ச்சிகளைப் படமாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நல்ல வேளையாக எஸ்.எஸ்.வாசன் அவர்கள் 'ஔவையார்' படம் எடுத்தார்கள்.

பிள்ளைகளுக்குப் பாடமாக 300 பக்கங்களிலே சொல்லிக் கொடுங்கள். அதே நேரத்தில் அவர்களுக்கு இரண்டு மணி நேரத்தில் ஒரு சினிமாவாகக் கொடுங்கள் போதும். சினிமாவுக்கு அவ்வளவு சிறப்பு இருக்கிறது. நீங்கள் 300 பக்கங்களைப் படிக்கச் சொன்னால் அதைத் தூக்கி எறிந்துவிட்டு நம்மோடு சண்டைபோடும் பையன், அதையே படமாக டி.வி.யில் கொடுத்தால், நன்றாகப் பார்ப்பான். படங்களில், இலக்கியத்தைக் கதையாகச் சொல்லுங்கள்.

## இணையிலா மாமன்னன் இராசராசன்:

இராசராசனின் துணிச்சல் மிக்க செயல்கள் கடவுளின் தூண்டுதலின் பேரில்தான் நடைபெற்றன எனக்கொள்ள இடமிருக்கிறது. ஏனெனில், தஞ்சையில் மிகப் பெரிய கோவிலைக் கட்டி, அதற்குள் தன்னையும் தன்னுடைமைகளையும் அர்ப்பணித்துள்ளான்.

**–மார்க் வெளியீட்டின் 'தமிழ்நாட்டின் அதிசயங்கள்' என்ற நூலில்.**

இராசராசனின் புகழுக்கு, அவனுடைய வீரச் செயல்கள் மட்டும் காரணமல்ல, அவன் வளர்த்த கலைகளும் நிர்வாகத் திறனும் காரணங்களாகும்.

**–டாக்டர் எஸ். கிருஷ்ணசாமி ஐயங்கார்**

பிற கடவுளர்களுக்குக் கொடுக்காத முக்கியத்துவத்தை அரசர்களுடன் போரிட்டு முப்புறம் அழித்த பராந்தகனுக்குக் கொடுத்து, சிற்பங்களிலும் ஓவியங்களிலம் வடித்துள்ளான். இதற்குக் காரணம் பல நாடுகளை வெற்றி பெற்று மிகப்பெரிய வீரனாக விளங்கியதேயாகும்.

**–மேரிஸ் பஸ்லாக்கி, சிவராமமூர்த்தி**

இராசராசனின் போர் வெற்றியும், நெறிப்படுத்தப்பட்ட பேரரசும், கலை மற்றும் இலக்கியப் பற்றும், சமயப் பொறையும் அவனைக் குறிப்பிடத்தக்க மன்னனாகத் திகழச் செய்தது.

**– சி. சிவராமமூர்த்தி**

முதல் இராசராசன், இராசேந்திரன், ஆகிய இவர்களின் ஐம்பது ஆண்டுக் கால ஆட்சி, தமிழ் மன்னர் அனைவரையும் அடிபணிந்து ஆண்ட காலமாகும்.

**–வின்சென்ட் ஏ. ஸ்மித்**

இவன் பல்லாண்டுகள் இளவரசராக அமர்ந்து, ஆட்சிப் பொறுப்புகள் பலவற்றை ஏற்று நடத்தி, அரசியலில் ஆழ்ந்த அனுபவமும், ஆற்றலும், நுண்ணறிவும் வாய்க்கப் பெற்றிருந்தான். சோழப் பரம்பரையின் பெயரையும் புகழையும் பன்மடங்கு உயர்த்திவிட்டவன் இராசராசனே. இராட்டிரகூடரின் படையெடுப்புக்களினால் திறனிழந்து, வளமிழந்து சுருங்கிவிட்ட சோழ நாடு மீண்டும் விரிவுற்று மிகப் பெரியதொரு பேரரசாக வரலாற்றில் திகழவைத்த பெருமை முதலாம் இராசராசனையே சாரும்.

**–டாக்டர் கே.கே. பிள்ளை**

காலம் முறைகளை மாற்றுமே தவிர, மனப் போக்கையும் உணர்ச்சிகளையும் மாற்றிவிடாது.
- அறிஞர் அண்ணா

அவனுக்கு நாம் வாய்வழியாகச் சொல்வதைக் காட்டிலும், படமாகச் சொல்லுங்கள்; அவனது மண்டையில் அது எளிதாக ஏறிவிடுகிறது. நேரமும் குறைகிறது. தமிழில் நிறைய விஷயங்கள் கிடக்கின்றன. அதை எல்லாம் எடுத்துச் செய்யலாம். இதையெல்லாம் ஒரு பெட்டகமாக இருந்து அரசு செய்ய வேண்டும்.

இப்போது வந்திருக்கின்ற தொழில்நுட்பக் கலைஞர்கள் அனைவரும் அதிபுத்திசாலிகள். உங்களுக்குத் தெளிவாகச் சொல்லிக் கொள்கிறேன். மிகவும் கெட்டிக்காரர்கள் இப்போது சினிமாவில் இருக்கிறார்கள். பொருளாதாரச் சந்தை என்ற ஒரு விஷயத்தில் சோரம்போய் விடுகிறார்களே தவிர, மற்ற விஷயத்தில் தெளிவான சிந்தனைகள் உள்ள கலைஞர்கள் இருக்கிறார்கள்.

ஒரு 'பைபிளை'ப் படமெடுத்து வெளியே விட முடிகிறது. ஒரு செங்கிஸ் கானைப் படமெடுத்து வெளியிடமுடிகிறது. ஒரு கரிகால் பெருவளத்தானை, இல்லை ஒரு பாண்டிய மன்னனைப் படமாக எடுக்கக்கூடாதா? ஒரு சிவகாமியின் சபதத்தைப் படமாக எடுக்கக்கூடாதா? இதுபோன்ற பெரிய பிரம்மாண்டமான படங்களை இப்போது நாம் எடுக்க முடியும். ஏனென்றால், இப்போது கோடிக்கணக்கில் பிரம்மாண்டங்களைச் செய்யப் பழகிவிட்டார்கள்.

இப்படிச் செய்தால் நாளை வரக்கூடிய சந்ததியினருக்கு இப்படியெல்லாம் இருந்தது தமிழ்ச் சமுதாயம், இப்படியெல்லாம் இருந்தது வழக்கு முறைகள், இப்படியெல்லாம் இருந்தது அரசு முறைகள் என்று சொல்லுவதற்கு வாய்ப்பாக இந்தத் திரைப்படங்கள் உதவியாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

நீங்கள் குற்றாலீஸ்வரனைத் தத்தெடுத்து இருக்கிறீர்கள். மகிழ்ச்சி, அளவில்லாத மகிழ்ச்சி. தொட்டில் குழந்தைகள் திட்டம் போட்டிருக்கிறீர்கள். மகிழ்ச்சி, அளவில்லாத மகிழ்ச்சி.


அதைபோல் திரை உலகத்தில் இருக்கின்ற ஜாம்பவான்களையும் நீங்கள் தத்தெடுத்து, அரசு தத்தெடுத்து, நல்ல கலைஞர்களுக்குக் கட்டளையிடுங்கள் அவர்கள் செய்வார்கள். காலத்தால் அழிக்க முடியாத இலக்கியப் படங்களை அவர்கள் செய்வார்கள் என்று நான் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். எனக்கு ஒரு சிறு பெருமை உண்டு. நான் சினிமாவில் ஒரு பதிவேடு போல் இருக்கிறேன். என் அம்மாவே என்னிடம் கேட்பார்கள். நான் மிகவும் சந்தோஷப்பட்டேன். "ஏண்டா, எனக்கே மறந்துவிட்டது. இதையெல்லாம் எப்படியடா மகனே நீ செய்கிறாய்?" என்று கேட்பார்கள். அப்படியெல்லாம் பழைய வரலாற்றைச் சொல்வதற்குச் சினிமா உதவும். இதை இந்த அரசு, நிச்சயமாக நீங்கள் செய்ய வேண்டும்.

ஏதோ நான் இதையெல்லாம் சொல்லி காரியங்களைச் சாதிப்பதற்கான சூழலில் வாழ்கின்ற மனிதன் அல்ல. தெரிந்ததை, உணர்ந்ததை, எனக்குத் தோன்றியதை நான் உரக்கச் சொல்லுவேன், அதையும் மலைமேல் நின்று சொல்லுவேன், நான் எந்தத் தடைக் கல்லுக்கும் பயந்தவன் அல்ல, தனி மனிதன்.

நான் உங்களை வாழ்த்துவதற்காக மனப்பூர்வமான 3 விஷயங்களைச் சொல்லுவேன். நேரு ஸ்டேடியம் உங்களுடைய சாதனை. பிலிம் சிட்டி உங்களுடைய சாதனை இந்த உலகத் தமிழ் மாநாடு உங்களுடைய சாதனை. யாரும் நடத்தலாம். ஆனால், நடத்தியது தடம் பதித்ததாக இருக்க வேண்டும் என்பதில் நீங்கள் அழுத்தமாக இருக்கிறீர்கள் என்பதில் எனக்குப் பெருமை. அதுபோல் கலை உலகில், தயவு செய்து நல்ல கலைஞர்களைத் தத்தெடுத்து, நம்முடைய தமிழ்க் கலாச்சாரத்தையும், நம்முடைய மண்ணையும், இந்த மக்களுடைய வாழ்க்கை முறைகளையும் எதிர்காலச் சந்ததியினர்களுக்கு எடுத்துச் சொல்வதற்கு இலக்கியப் பெட்டகங்களாகச் சினிமாவை எங்களுக்குக் கொடுத்து நீங்கள் எங்களைக் காப்பாற்ற வேண்டும்.

சிறுசேமிப்பு – உங்கள் குடும்பத்தின் முதல் செலவாக இருக்கட்டும்

# கிசான் விகாஸ் பத்திரம்
# செழிப்பான வாழ்விற்கு சிறப்பான திட்டம்




## சி ற ப் பு அ ம் ச ங் க ள்

- 5 1/2 ஆண்டுகளில் முதலீடு இரட்டிப்பாகும்.
- 18.18% சாதாரண வட்டி.
- முதலீட்டுக்கு உச்சவரம்பு இல்லை.
- இரண்டரை வருடங்களுக்குப் பிறகு தேவைப்பட்டால் பணத்தை திரும்பப்பெறலாம்.
- வங்கிகளில் அடமானம் வைத்து கடன் பெறலாம்.
- வாரிசுதாரர் நியமன வசதி உண்டு.
- 1.4.95 முதல் தமிழ்நாட்டில் உள்ள அஞ்சலகங்களில் ரூபாய் 1,000/-மும் அதற்கு மேலும் முதலீடு செய்வோருக்கு 2% ஊக்கத்தொகை வழங்கப்படும்.

*மேலும் விவரங்களுக்கு அணுகவும் :*

**ஆணையர், சென்னை மாநகராட்சி (சிறு சேமிப்பு பிரிவு), சென்னை – 600 003. தொலைபேசி : 584440.**

**மண்டல இயக்குநர், தேசிய் சேமிப்பு நிறுவனம், சென்னை – 600 002. தொலைபேசி : 849962.**

**மாவட்ட ஆட்சியாளர்கள், வட்டாட்சியர்கள்,**

**வட்டார வளர்ச்சி அலுவலர்கள், அஞ்சலக அதிகாரிகள் மற்றும் சிறுசேமிப்பு முகவர்கள்.**

**இயக்குநர், சிறு சேமிப்புத்துறை,**

**'சயர் மேன்ஷன்', 621, அண்ணா சாலை, சென்னை – 600 006. தொலைபேசி : 8251784, 8251685.**

**சிறுகுடும்பம் செல்வக்குடும்பம்**

சிறுசேமிப்பு – செழுமையின் அடையாளம்.

DIRP/DIS/95

## கண்ணியம் மிக்க

# காயிதேமில்லத்

### காயிதே மில்லத் அவர்களின் பிறந்த நூற்றாண்டு விழாவையொட்டி இந்தக் கட்டுரை வெளியிடப்படுகிறது

**நா**டு நலம்பெற, நாட்டு மக்களுக்கு நன்மைகள் விளைந்திட— தன்னலம் கருதாது உழைத்த தலைவர்கள் சிலரை நாம் அறிவோம். அவ்வாறான தேசத் தலைவர்களின் பிறந்த நாள் விழாக்களை மட்டுமல்ல; தன்னிகரற்ற தமிழ்ச் சான்றோர்கள், மனிதாபிமானத்தால் மங்காப் புகழ்பெற்ற மதத் தலைவர்கள் ஆகியோரின் பிறந்தநாள் விழாக்களையும் தமிழ்நாடு அரசே கொண்டாடி வருவதும் நமக்குத் தெரியும்.

சிலருடைய பிறந்த நாட்கள் அரசு விடுமுறை நாட்களாக அறிவிக்கப்பட்டிருக்கின்றன. சிலர் பிறந்த நூற்றாண்டு அரசால் ஆண்டு முழுமையுமே கொண்டாடப்பட்டிருக்கின்றது.

இந்த வகையில், இஸ்லாமிய சமுதாயத்தின் ஈடு இணையற்ற தலைவராக விளங்கிய கண்ணியம் மிகுந்த காயிதேமில்லத் அல்ஹாஜ் எம். முகம்மது இஸ்மாயில் சாகிப் அவர்களின் பிறந்தநாள் விழாவையும் தமிழ்நாடு அரசே கொண்டாடி வந்தது. இந்த ஆண்டு அவர் பிறந்த நூற்றாண்டு; இவ்விழா அரசு மூலம் இனிதே கொண்டாடப்படவிருக்கிறது.

**மக்கள் தலைவர்**

சிறுபான்மை இனத்தாரின் சிறப்புமிக்க காவலராகப் போற்றப்பட்டார் கண்ணியம் மிக்க முகம்மது இஸ்மாயில் அவர்கள். 'ஹஜ்' பெருநாளில் பிறந்தார் இவர் என்பதால் இபுராகிம் (அலை) அவர்களின் திருக்குமாரர் இஸ்மாயில் (அலை) அவர்களின் நினைவைப் போற்றும் வண்ணம் முகம்மது இஸ்மாயில் என்று பெயர் சூட்டப்பட்டது என்பர்.



'காயிதேமில்லத்' என்பது அவருக்கு மக்களால் வழங்கப்பட்ட சிறப்பு விருது; அந்த அரபுச் சொல்லுக்கு 'மரியாதைக்குரிய மதத் தலைவர்', 'மக்களின் நிகரற்ற வழிகாட்டி' என்றெல்லாம் பொருள்.

பெரும்பான்மை மக்களின் பேரன்பைப் பெற்ற அவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் முகம்மது இஸ்மாயில் என்பதே.

'காயிதேமில்லத், அமைதியை விரும்பும் அருமையான தலைவர். அடக்கம், பெருந்தன்மை, விவேகம் நிறைந்தவர். அவருடைய பேச்சில் நாற்பதாண்டுக்கால அரசியல் வரலாறு பொதிந்து கிடக்கிறது என்பதை நாம் மறக்க முடியாது' – என்றார், அறிஞர் அண்ணா அவர்கள். காயிதேமில்லத் அவர்கள், அவரோடு மிக நெருக்கமான தோழமை கொண்டிருந்தார்.

. திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் உள்ள 'பேட்டை' என்னும் சிற்றூரில் **1896**-ஆம் ஆண்டு ஜூன் மாதம் **5**-ஆம் நாள் பிறந்தார் காயிதேமில்லத் அவர்கள். அவருடைய தந்தையார் பெயர் மியாக்கான் இராவுத்தர்; மார்க்க ஞானம்

மிக்க மௌல்வியான அவர், திரு வாங்கூர் மன்னர் குடும் பங்களுக்குத் துணி விற்பனை செய்தவர்; பெரிய வியாபாரி; பன்மொழிப் புலவர். காயிதே மில்லத்தின் தாயார் பெயர், முகைதீன் பாத்திமா.

காயிதேமில்லத் அவர்களின் துணைவியார் பெயர் ,ஜமால் ஹமிதா பீவி என்பதாகும். இவர்களுடைய ஒரே மகன், ஜமால் முகம்மது மியாக்கான் என்று அழைக்கப்பட்டார்.

## விடுதலை வேட்கை

தம்முடைய 5-ஆம் வயதி லேயே தந்தையாரை இழந்த காயிதேமில்லத் தம் தாயின் நிழலிலேயே தக்கபடி வளர்ந்தார்.

அது, இந்தியாவெங்கும் சுதந் திரக்கனல் மூண்டுவந்த காலம் ஆதலால், அந்தப் பாதிப்பு இந்தப் பிஞ்சுக்கும் சிறிது சிறிதாக ஏற்படவே செய்தது. இருப்பினும், திருநெல்வேலியில் கசடறக் கற்கத் தொடங்கிய இவர் கல்வி, பின்னர் சென்னை கிறித்துவக் கல்லூரியில் தொடர்ந்தது.

இளமைக் காலம் முதலே மக்கள் தொண்டில் பெரிதும் ஆர்வத்தோடு ஈடுபடலானார், இவர். படிப்பில் மிகுந்த ஊக்கத் தோடிருந்த காயிதேமில்லத்துக் குப் பரிசுகள் பலவும், பாராட்டு தல்களும் அவ்வப்போது கிடைத் தன. கல்லூரிக் காலத்தில் சிறந்த மாணவர் பட்டியலில் இவரே முதலாமவராகத் திகழ்ந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



**சேவை என்பது கூலியை உத்தேசித்தோ தனது சுய நலத்தை உத்தேசித்தோ செய்வ தல்ல. மற்றவர்கள் நன்மை அடைவதைப் பார்த்து மகிழ்ச்சி யும், திருப்தியும் அடைவதற் காகவே செய்யப்படும் செயல் தான் சேவையாகும்.**

## அமைப்பாளர் பொறுப்பு

1920-ஆம் ஆண்டில், பி.ஏ. படித்துக் கொண்டிருந்த காயிதே மில்லத் அவர்கள், சென்னை மாகாண அரசியல் மாநாட்டில் முக்கியப் பங்கு வகித்தார். தணியாத சுதந்திர தாகத்தால், காந்தியடிகள் அறிவித்த ஒத் துழையாமை இயக்கத்தில் ஈடு பட்டார். அதனால், தமது இறுதித் தேர்வைப் புறக்கணித்து விட்டுக் கல்லூரியை விட்டே வெளியேறினார்.

நாட்டு விடுதலை மீதான இத்தகைய நாட்டமே, அவர் பட்டம் பெறத் தடையாக இருந் தது எனலாம்.

கல்லூரி வாழ்க்கை முடிவுக்கு வந்தபின், புகழ்பெற்ற 'ஜமால் முகய்யத்தீன் தோல் நிறுவனத்தில்' சேர்ந்து பணி புரியலானார் காயிதேமில்லத். பிறகு, உண்மையான உழைப் பாலும், நேர்மையான நடவடிக் கைகளாலும் நாளடைவில் அந் நிறுவனத்தின் நிர்வாகியானார்; பிறகு, அதன் பங்குதாரராகவே உயர்வடைந்தார்.

வணிகராகவே வாழ்வைத் தொடங்கினார் இவர்; எனினும், வாடிக் கிடந்த இஸ்லாமிய மக்களின் வாட்டம் நீக்கும் நாட்டம் கொண்டார். இது மட்டுமன்றி, சாதி வேறுபாடு பாராமல், ஏழை எளியோருக் கெல்லாம் தாராளமாக உதவி புரிந்திடலானார்.

இந்தியாவிலிருந்து பாகிஸ் தான், தனியே பிரிந்த பொழுது, இந்திய யூனியன் முஸ்லீம் லீகிற்கு யாரை அமைப்பாளராக் குவது என்ற வினா எழுந்தது. உண்மையாலும், உழைப்பாலும், தாராளச் சிந்தையாலும் புக ழோடு தலைநிமிர்ந்த காயிதே மில்லத் முகம்மது இஸ்மாயில் அவர்களே அப்பதவிக்கு ஏற்ற நபர் என்று இஸ்லாமியச் சமுதாயமே அடையாளம் காட்டியது. அவரையே தேர்ந் தெடுத்து இந்திய யூனியன் முஸ்லீம் லீக்கின் அமைப் பாளராக அறிவித்தார் முகம்மது அலி ஜின்னா.

காங்கிரஸ் கட்சியில் பெரி தும் ஈடுபாடு கொண்டிருந்த இவர், முஸ்லீம் சமுதாயத்தின் முன்னேற்றத்திற்குப் பாடுபட வேண்டியிருந்த காரணத்தால் அதை விட்டு விலகி, முஸ்லீம் லீகில் சேர்ந்தார்.

## அரசியல் வாழ்வு

**'இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து— அதனை அவன்கண் விடல்'**

—என்று வள்ளுவர் காட்டிய

வழிமுறையில், விரைவிலேயே மலபார், கர்நாடகம், ஆந்திரா ஆகியவை இணைந்த சென்னை மாகாண முஸ்லீம் லீக் தலைவர் பதவி, காயிதேமில்லத்திடம் 1948-இல் ஒப்படைக்கப்பட்டது.

ஆனால் ஒன்று. சிறுபான்மை இனத்தவரான இஸ்லாமியரின் மனத்திலே மட்டுமன்றி, தாழ்த் தப்பட்ட மக்கள் உட்பட ஏராள மான எல்லாத்தரப்பு மக்களின் இதயத்திலும் நிறைந்தவராக இருந்தார், இவர். 1946-ஆம் ஆண்டு முதல், 1952 வரை, பழைய சென்னை மாநிலச் சட்டமன்ற உறுப்பினராகவும், எதிர்க்கட்சித் தலைவராகவும், காயிதேமில்லத் தேர்ந்தெடுக் கப்பட்டிருந்ததே அதற்குத் தக்க சான்று ஆகும்.

அது மட்டுமல்ல, 1952 முதல் 1958 வரை, நாடாளுமன்ற மேலவை உறுப்பினராகப் பதவி வகித்தார்; 1962-ஆம் ஆண்டு முதல் 1972-ஆம் ஆண்டு ஏப்பிரல் திங்கள் 6 ஆம் நாள் வரை நாடாளுமன்ற உறுப் பினராகவே இருந்து நாடு போற்றத் தொண்டாற்றினார்.

காயிதேமில்லத் இஸ்மாயில் அவர்கள் தமிழ்நாட்டைச் சேர்ந்தவரே எனினும், இந்திய நாடே போற்ற இணையற்று வாழ்ந்தார். இதற்கோர் எடுத்துக் காட்டு உண்டு; தமிழகத்தில் பிறந்த இவர், தேர்தலில் இரண்டு முறை நின்று வெற்றி பெற்றது, கேரள மாநிலத்தைச் சேர்ந்த மஞ்சேரி தொகுதியேயாகும். இதிலும் இன்னொரு சிறப் புண்டு. அத்தொகுதியிலே போட்டியிட்ட காயிதேமில்லத், தொகுதி மக்கள் தேவையறிந்து, துவளாமல் தூய தொண்டு புரிந்திருக்கிறார். ஆனால், தேர் தல் நடைபெறுவதற்கு முன் பாகத் தேர்தல் பிரச்சாரத் துக்கென்று ஒருமுறைகூட தொகுதிப் பக்கம் சென்ற தில்லை!

## நாட்டுப் பற்று

அநீதிக்கும், அக்கிரமங் களுக்கும் ஆளான மக்களின் பிரதிநிதியாக நின்று அல்லும் பகலும் அவர்கள் மேம்பாட்டிற் காகப் பாடுபட்டார் காயிதே மில்லத்.

தாய்நாட்டு நலனே தனது நலன் என்கிற கொள்கைப் பிடிப்பு அவருக்கு இருந்தது. இந்தியாவைச் சில அண்டை நாடுகள் எதிரி நாடாகக் கருதிய வேளையில், உள்ள உறுதியோடு இந்தியாவைக் காப்போம் என்று முழங்கியவர் காயிதேமில்லத்.

இன்றைக்கும் ஆறாத புண் ணாக இருக்கின்ற காஷ்மீர் பிரச்சினையில் "காஷ்மீர் இந்தியாவின் ஒரு பகுதியே" என்று அவர் சொன்ன உறுதி மிக்க சொற்கள், ஐக்கிய நாடுகள் சபையிலேயே மேற்கோளாக எடுத்துக்காட்டப்பட்டது.

அதுமட்டுமல்ல; சீனப் போர் மேகம் இந்தியாவைச் சூழ்ந்த போது - 'என் ஒரே மகனைப் போருக்கு அனுப்பவும் நான் தயார்' என்று நேரு பெரு மகனாருக்குக் கடிதம் எழுதிய சிறப்பினர் காயிதேமில்லத் ஆவார்!

இந்தியாவின் பொது மொழியாக எந்த மொழியைத் தேர்ந்தெடுப்பது என்று ஆராய அமைக்கப்பட்ட குழுவில், இவரும் முக்கிய அங்கம் வகித் தார். சிலர் இந்தி மொழிக்கே அத்தகுதி உண்டு என்று வாதாடினர். பழமையானதும் இனிமையானதுமான தமி ழுக்கே அந்தத்தகுதி உண்டு என்று வாதாடினார், இவர். தமிழ் செழிக்கவும், ஆங்கிலம் அளவோடு பயன்படுத்தப் படவும் அப்போது இவர் கூறிய அறிவுரைகள், நடத்திய விவா தங்கள் வரலாற்றுப் புகழ் மிக்கவைகள் ஆகும்.

அவருடைய நாட்டுப் பற்றுக் கும், மொழி உணர்வுக்கும் இவ் வாறான சான்றுகள் ஏராளம் உண்டு.

## அரசுப் பெருமை

காயிதேமில்லத் இஸ்மாயில் சாகிப் அவர்கள் 5.4.1972 அன்று பெரிதும் உடல் நலிவுற்றிருந்து, தமது 76-ஆம் வயதில் இவ்வுலக வாழ்வை நீத்தார். அவருடைய



**வழியில் முள் இருந்தால் தைக்கும்; செருப்பில் ஓட்டை இருந்தால் சுடும்; அதைப்போல நம்மிடம் ஜாதிகள் பல இருந்தால் அந்நியர் ஊடுருவல் நேரத்தான் கூடும்!**

**- அறிஞர் அண்ணா**

பூதவுடல், சென்னை திருவல்லிக் கேணியில் உள்ள வாலாஜா மசூதியில் நல்லடக்கம் செய்யப் பட்டது.

அந்தப் பெருமகனாரின் பெருமையைப் போற்றிடும் வண்ணம், தமிழ்நாடு அரசு பல நற்பணிகளைச் செய்திருக்கிறது.

சென்னை அறிஞர் அண்ணா சாலையில் உள்ள அரசுப் பெண்கள் கல்லூரிக்குக் 'காயிதேமில்லத் மகளிர் கல்லூரி' என்று பெயரிடப்பட்டது. சென்னை மாநகரில் உள்ள முக் கியச் சாலைகளில் ஒன்றான திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை 'காயிதேமில்லத் சாலை' எனப் பெயர்பெற்றது.

கி.பி.1715-இல் கட்டப்பட்ட வாலாஜா பாலத்திற்குக் 'காயிதே மில்லத் பாலம்' எனப் பெயர் சூட்டப்பட்டது.

டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் தமிழக முதல்வராக இருந்த போது, காயிதேமில்லத் பிறந்த நாளான ஜூன் 5-ஆம் நாளில், அன்னாரின் பிறந்தநாள் விழா, அரசால் நடத்தப்பட வேண்டும் என்று ஆணை பிறப்பித்தார். 9.8.1980 அன்று தமிழ்நாடு சட்டப்பேரவையில் காயிதே மில்லத் அவர்களின் திருவுருவப் படமும் திறந்து வைத்துப் பெருமைப்படுத்தப்பட்டது.

அடிமைத் தனத்தை ஒழிக்க வேண்டுமென்றால் மக்களுடைய மனத்திலும், உடம்பிலும் குடிகொண்டுள்ள சோம்பலைப் போக்கி, அவர்களுடைய புத்தி நுட்பத்தையும், ஆக்கத் திறனையும் தட்டி எழுப்ப வேண்டும்.

—அண்ணல் காந்தியடிகள்

1986-87-ல், சட்டப் பேரவையில் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் உரையாற்றுகையில் காயிதேமில்லத் அவர்கள் பெயரால் தனியொரு மாவட்டமே அமைக்கப்படும் என்று அறிவித்தார்; அந்த அறிவிப்பு, அவர் வழி நடந்து அரசாளும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களால் 18.10.1991-இல் மெய்யாக்கப் பட்டது. நாகப்பட்டினத்தைத் தலைமையிடமாகக் கொண்டு 'நாகை காயிதேமில்லத் மாவட்டம்' மலர்ந்திருப்பதை நாம் காண்கிறோம்.

1970-இல் தமிழ்நாடு அரசின் ஒரே ஏடாகத் 'தமிழரசு' தொடங்கப்பட்டபோது, ராஜாஜி மண்டபத்தில் நடைபெற்ற அதன் வெளியீட்டு விழாவில், காயிதே மில்லத் அவர்களும் கலந்து கொண்டார்; முதல் இதழைப் பெற்றுக்கொண்டு வாழ்த்துரை வழங்கியவர்களில் அவரும் குறிப்பிடத்தக்கவராவார்.

**—பி.எல். ராஜேந்திரன், எம்.ஏ.,**


தமிழரசு

**சந்தா விவரம்**

'தமிழரசு' தமிழ் (மாதம் இருமுறை)

ஆண்டுச் சந்தா ... ரூ. 72

அரையாண்டுச் சந்தா ... ரூ. 36

'தமிழரசு' ஆங்கிலம் (மாதம் ஒருமுறை)

ஆண்டுச் சந்தா ... ரூ. 36

சந்தாத் தொகையை மணியார்டர் அல்லது பாங்க் டிராப்ட் மூலம் அனுப்ப வேண்டிய முகவரி:

உதவி இயக்குநர்
'தமிழரசு'
அரசினர் தோட்டம்
சென்னை 600 002.

தமிழரசு

படிக்க - பயன்பெற - பாதுகாக்க

# வாழ்வில் உயர்வோம்!

–பூவேந்தன்



கல்கூட கடைந்தெடுத்தால் சிலையாகும்
களர்நிலமும் கைப்பட்டால் விளைவாகும்
புல்கூட சிலஉயிருக் குணவாகும்.
புன்சிரிப்பை முகம்பெற்றால் பொலிவாகும்!



சொல்கூட பொருளிருந்தால் சுகமாகும்
சொந்தங்கள் அன்பிருந்தால் தொடராகும்
கல்விகூட கற்பதனால் வந்துசேரும்
கற்றவரும் போற்றிடவே மதிப்புங்கூடும்!



மலைகூட மனமிருந்தால் கடுகாகும்
மணல்கூட முயற்சித்தால் கயிறாகும்.
அலைகூட ஆர்ப்பரித்தால் அழகாகும்
அனைவரும் ஒன்றுசேர்ந்தால் வளமாகும்!



மொழிநாளும் கற்பவர்க்கு இனிப்பாகும்
மொழிபவரின் திறமையால் சுவையாகும்.
விழியினிலும் கருணையினால் சுடர்தேங்கும்
விலகாத இருள்கூட புறம் போகும்!



நாகூட சுட்டுவிட்டால் வடுவாகும்
நாவடங்கின் நல்வாழ்வு கைகூடும்.
பாகூட பொருளால்தான் அழகாகும்
பாதையினால் தான்பயணம் மகிழ்வாகும்!


## சுற்றுப்புறம், தூய்மை செய்வோம்!



நாம் வாழ்வதற்கு மூன்று நன்றாக இருக்க வேண்டும். ஒன்று நம் உள்ளம். மற்றொன்று உடம்பு. மூன்றாவது, சுற்றுப்புறம். நாம் விரும்பினால், உள்ளத்தை முழுதும் நன்றாக வைத்திருக்க முடியும். ஆனால், எல்லோரும் சேர்ந்து விரும்பினால்தான், சுற்றுப்புறத்தை நன்றாக அமைக்க முடியும்.

- டாக்டர் மு.வ.

## புத்தக ஏற்றுமதி!



இந்தியாவிலிருந்து புத்தகங்கள் ஏற்றுமதி 1991-92-இல் ரூ.42 கோடியிலிருந்து, 1992-93-இல் ரூ.50 கோடியாக உயர்ந்தது. புத்தக ஏற்றுமதி மூலம் அமெரிக்கா, பிரிட்டன், ஜெர்மனி, நேப்பாளம் ஓமன், இலங்கை, சவூதி அரேபியா, ஐக்கிய அரசு எமிரேடுகள் ஆகிய நாடுகளிலிருந்து அந்நியச் செலாவணி வருமானம் உயர்ந்திருக்கிறது.

# ஊரும் பேரும்

## கும்பகோணம்

சோழ நாட்டில் தெய்வ நலம் சிறக்கப் பெற்ற ஒரு தலம் குடமூக்கு என்னும் பெயர் பெற்றிருந்தது. அது குடந்தை எனத் தேவாரப் பாடல்களிலும், ஆழ்வார் திருப்பாசுரங்களிலும் குறிக்கப்படுகின்றது. அவ்வூரின் பெயர் கும்பகோணம் என்று இப்போது வழங்குகின்றது.

## விருத்தாசலம்

தென்னார்க்காட்டிலுள்ள சிறந்த சிவத் தலங்களில் ஒன்று திருமுதுகுன்றம். அப்பகுதியில் கோயில் கொண்டுள்ள இறைவனைப் பழமலைநாதர் என்று இன்னும் சைவர்கள் போற்றுகின்றார்கள். அவ்வூரின் பெயர் வடமொழியில் விருத்தாசலம் எனப் பெயர்த்து அமைக்கப்பட்டது. இன்று பழம் பெயர் மறைந்து புதுப் பெயரே வழங்கி வருகின்றது.

# தெரிந்து கொள்ளுங்கள்

அயர்லாந்து

இது, கிரேட் பிரிட்டனுக்குச் சிறிது மேற்கே உள்ள தீவு. நீளம் 302 மைல். அகலம் சராசரி 110 மைல். குன்றுகளால் சூழப்பட்ட சமவெளிகள் கொண்டது. பல ஏரிகளும், ஆறுகளும் இங்கு உள்ளன. பசுமையான புல் வெளிகள் நிறைந்திருப்பதால் இதை 'மரகதத் தீவு' என்ற பாராட்டுவார்கள்.

அயர்லாந்தில் வடபகுதி கிரேட் பிரிட்டனைச் சேர்ந்தது. தலைநகரம் பெல்டாஸ்ம். தென்பகுதி அயர்லாந்து குடியரசு என்னும் ஒரு சுதந்திர நாடாகும். ஏரே என்று அழைக்கப்படுகின்றது. இதன் தலைநகரம் டப்ளின்.

ஏரே மக்களுள் பெரும்பாலோர் கத்தோலிக்கக் கிறிஸ்தவர்கள். இங்கு ஐரிஷ் அல்லது கேலித் மொழி பேசுகிறார்கள். வட அயர்லாந்து மக்கள் பிராட்டஸ்டெண்ட் கிறிஸ்தவர்கள். இவர்கள் மொழி ஆங்கிலம்.

- குழந்தைகள் கலைக்களஞ்சியம்: தொகுதி - 1

# எல்லாம் கம்ப்யூட்டர் மயம்!



எங்கும் கம்ப்யூட்டர், எதிலும் கம்ப்யூட்டர் என்ற இன்றைய காலத்தில், கம்ப்யூட்டர் மூலமே கடிதம் அனுப்பும் வசதியை அஞ்சல் துறை அறிமுகப்படுத்தியுள்ளது. இதற்கென நமது இல்லத்தில் கணிப்பொறி இருப்பது அவசியமில்லை என்பதே இதன் சிறப்பு. Hybrid Mail Service என்று வழங்கும் கணிப்பொறி அஞ்சல் சேவையில், அனுப்ப வேண்டிய தகவலை, எழுத்து வடிவிலோ, கம்ப்யூட்டர் பிளாப்பியிலோ அளிக்கலாம். வரி வடிவத்தில் இருக்கும் தகவல் கணினியில் பதிவு செய்யப்பட்டவுடன், சேவைக் கட்டணத்தையும் அதுவே தெரிவித்து விடுகிறது.

இங்கிருந்து சேரவேண்டிய இடத்திலுள்ள அஞ்சலகத்தின் கம்ப்யூட்டருக்கு, செயற்கைக் கோள் மூலம் தகவல் அனுப்பப்படுகிறது. பிற்பகல் மூன்று மணிக்குள் ஏற்கப்படும் தகவல்கள், அன்றைய தினமே பட்டுவாடா ஆகிவிடும்.

பெறுநரின் தொலைபேசி எண் தெரிவிக்கப்பட்டிருந்தால், அவருக்குத் தகவல் வந்துள்ளது குறித்து தொலைபேசி மூலம் தெரிவிக்கப்படும். பெறுநரிடம் கணினி இருக்குமெனில், பிளாப்பியாகவோ அல்லது வரிவடிவிலோ தகவல் அவரது இல்லத்தைச் சென்றடையும்.

1995-ஆம் ஆண்டு ஜனவரி 14-ந் தேதி முதல், சென்னை, பம்பாய், தில்லி, பெங்களூர், சிம்லா, பாட்னாவில் கணிப்பொறி அஞ்சல் சேவை அறிமுகமாகியுள்ளது.

# எலும்புகளை ஒட்ட உதவும் அதிசயப் பசை!


மனித உடலில் உடைந்து போன எலும்புகளை ஒட்டுவதற்கு அதிசயப் பசையை அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். எலும்பு முறிவுச் சிகிச்சையில் இது ஒரு புதிய புரட்சியைத் தோற்றுவிக்கக் கூடும் என்று நம்பப்படுகிறது.

மணிக்கட்டு, கணுக்கால், இடுப்பு எலும்புகள் உடைந்து போனால் அவற்றில் உலோகத் தகடுகளைப் பொருத்தித் திருகாணிகள் மூலம் இணைக்கும் முறையையே டாக்டர்கள் தற்போது பயன்படுத்தி வருகின்றனர். புதிய பசை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதன் மூலம், இந்த உலோகத் தகடுகளுக்கும் திருகாணிகளுக்கும் இனி வேலை இருக்காது.

உடைந்துபோன எலும்புப் பகுதியில் ஊசி மூலம் இந்தப் பசையைச் செலுத்தினால், பத்து நிமிடங்களுக்குள் அது அப்படியே இறுகிப்போய் விடுகிறது. உடைந்துபோன எலும்பு இந்தப் பசையினால் ஒட்டப்பட்டு, இயற்கையான எலும்பைப் போன்ற வலிமை ஏற்பட்டுவிடுகிறது.

இந்தப் புதிய பசையில் உள்ள பொருட்கள் இயற்கை எலும்பில் உள்ள பொருட்களைப் போன்றே உள்ளதால், உடலின் இயக்கம் இதனை எளிதாக ஏற்றுக் கொள்கிறது. எனவே உடைந்த எலும்பு எளிதாகக் கூடிப்போய் முழுமைபெற்று விடுகிறது.

கலிபோர்னியாவில் கியூப் பர்ட்டினோ என்னும் இடத்தில் உள்ள 'நோரியன் கார்ப்பரேஷன்' என்னும் நிறுவனத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள், பிரெண்ட் கான்ஸ்டன்ஸ் என்பவர் தலைமையில் இந்தப் புதிய கண்டுபிடிப்பை நிகழ்த்தியுள்ளனர். இந்தப் புதிய பசைக்கு 'எஸ்.ஆர்.எஸ்.' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.



# பெண்களின் பெருமை!

## டாக்டர் லலிதா காமேஸ்வரன்

'பெண்ணின் பெருமை' என்ற தலைப்பில் இன்றைய கருத்தரங்கு அமைக்கப்பட்டிருக்கின்றது. யாரிடம் இந்தத் தலைப்பைச் சொன்னாலும், அவர் முதலில் என்னிடம் சொன்ன உரை—

**'பெண்ணின் பெருந்தக்க**
**யாவுள**
**கற்பென்னும் திண்மையுண்**
**டாகப் பெறின்.**

—இது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வள்ளுவர் சொன்ன கூற்று. ஆனால், இந்த நூற்றாண்டில் பாரதியார் பாடினார்:

**'கற்பு நிலை என்று சொல்ல**
**வந்தார்,**
**இரு கட்சிக்கும் அதனைப்**
**பொதுவில் வைப்போம்,**
**எட்டும் அறிவினில்**
**ஆணுக்கு இங்கே பெண்**
**இளைப்பிள்ளை காண்**
**என்று கும்மியடி!'**


—என்று அவர் சொன்னார்.

அது மட்டுமல்ல,

**'நாணும் அச்சமும்**
**நாய்கட்கு வேண்டுமாம்;**
**ஞான நல்லறம் வீர**
**சுதந்திரம்**
**பேணும் நற்கொடி**
**பெண்ணின் குணங்களாம்!'**

என்று வலியுறுத்தினார். எந்தச் சூழ்நிலை ஏற்பட்டாலும், பொதுவாக மக்கள் மத்தியில் வழங்கப்படும் ஒரு சிந்தனை—தியாகம்தான் ஒரு பெண்ணுக்குச் சிறப்பு தருகிறது என்ற தத்துவக் கருத்து. அந்தக் கருத்தை வளர்த்து—சாவித்திரி, நளாயினி, தமயந்தி கதைகளை நம்மிடையே பரிமாறி, பகுத்தறிவைக் கடந்த ஒரு நிலைக்குப் போய், 'சதி' எனக் கூறி, இறக்க, கணவனின் சிதையில் வீழ்ந்து எரி ஊட்டி மடிவதே சிறந்த பெண்ணின் இலக்கணம் என்னும், அறியாமையைக்கூட சமுதாயம் ஏற்றுக் கொள்ளும் நிலைக்குத் தாழ்ந்து விட்டோம் என்று மேல் நாட்டார் நம்மைக் குறை கூறுவர். இத்தகைய விபரீதப் போக்கு உலகில் வேறு எந்த நாட்டிலும் இருக்கவில்லை. பெண்ணிற்குப் பெருமை சேர்ப்பது தியாகம் என்ற எண்ணம் முதலில் எப்படி வந்தது? அதை நாம் சிந்திக்க வேண்டும்.

தியாகத்தின் முற்றிய நிலைதான் தாய்மை. தன் தேவைகளை விட, தன் குழந்தைகளின் தேவைகளையும், தன் கணவனின் தேவைகளையும், தன் குடும்பத்தினர் தேவைகளையும் முன்வைத்து வழி நடக்கும் பெண்களின் உணர்வுகள் அவருடைய தாய்மை உணர்வால் தோன்றும் சிறப்பு. தானாக வலிந்து முன்வந்து தியாகம் செய்யும் பெண்ணின் சிறப்பை உணராமல், பெண்கள் பிறருக்கு அடிமை என்று கருதும் மடமை, சமுதாயத்தில் வளர்த்ததனால் தான் இன்று பெண் உரிமை இயக்கங்கள் பல தோன்றி



முழக்கமிடும் நிலையும் வந்திருக்கிறது.

**"எட்டும் அறிவினில்**
**ஆணுக்கு இங்கே பெண்**
**இளைப்பில்லை காண்",**

என்று ஒப்புக்கொண்டபின்—அறிவியல், தொழில்நுட்பம் இவைசார்ந்த முன்னேற்றம் அடைந்த சமுதாயத்தில் அறிவாற்றலின் அடிப்படையில் செய்யப்படும் அனைத்துப் பணிகளிலும் மகளிர் பங்குகொள்ளத் துடிப்பது இயற்கையே.

**'பட்டங்கள் ஆள்வதும்,**
**சட்டங்கள் செய்வதும்**
**பாரினில் பெண்கள் நடத்த**
**வந்தோம்'**

என்ற பாரதியார் பாடலுக்கு இணங்க, இன்று தமிழ்நாட்டில் முதலமைச்சராகப் பாங்குடனும், பொலிவுடனும் அமர்ந்து மாண்புமிகு முதல்வர் ஜெயலலிதா அம்மையார் அவர்கள் அனைவரும் வியக்கப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பது எல்லோருடைய சந்தேகத்தையும் நிவர்த்திக்கும் சான்றாக விளங்குகிறது.

முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுடைய மறைவுக்குப்பின் தமிழ்நாட்டில் பல குழப்பங்கள் விளைந்தன. இவை அனைவரும் அறிந்ததே, எனினும் பல குழப்பங்களுக்குப் பிறகு தமிழ்நாட்டு வாக்காளர் பெருமக்கள் செல்வி ஜெயலலிதா அம்மையாரை ஒருமனதுடன் தலைவியாய் ஏற்று ஆட்சி பீடத்தில் அமர்த்தியது குறிப்பாகச் சுட்டிக் காட்டுவது என்ன?

☆ **"சாதி மதம் முதலிய வேற்றுமைகளைத் தொலைக்கவல்லது கலப்பு மணம் என்பது எனது கொள்கை.**

**—தமிழ்த்தென்றல் திரு.வி.க.**

சாதாரண மக்கள் அறிவையும், திறனையும் எங்கே கண்டாலும் போற்றத் தயாராக இருக்கிறார்கள். ஆண் பெண் என்ற வேற்றுமை அவர்களின் சீர்தூக்கும் ஆற்றலை மழுக்கிவிடுவதில்லை. சங்க இலக்கியக் காலத்தில் ஔவையார் காலம்தொட்டு சமய இலக்கியக் காலத்தில் காரைக்கால் அம்மையார், ஆண்டாள் போன்றவர்களின் பெருமையைப் போற்றி இன்றைய தமிழ்ச் சமுதாயத்தில் தமிழ்நாட்டின் முதல் பெண் முதல்வரை ஆட்சி பீடத்தில் அமர்த்தியிருக்கும் தமிழ்ச் சமுதாயம் பெண்ணின் ஆற்றலையும், திறமையையும், பெருமையையும் நன்றாகவே உணர்ந்திருக்கிறது, போற்றியும் வருகிறது.

தமிழ்நாட்டின் இருபெரும் காப்பியங்களான சிலப்பதிகாரமும், மணிமேகலையும் இரு சிறந்த பெண்களைக் காப்பியத் தலைவிகளாகக் கொண்டு எழுதப்பட்டவை என்பது நம்மைச் சிந்திக்க வைக்கும். மற்றைய நாடுகளிலும், மற்றைய மொழிகளிலும் உருவாக்கப்பட்டிருக்கும் காப்பியங்கள் பலவும், காப்பியத் தலைவர்களையே சுற்றிச் சுற்றிப் பின்னப்பட்ட வரலாற்றுக் கதைகள் அல்லது புராணங்களாகும்.

ஆனால், தமிழ்நாட்டின் சிறந்த இரு காப்பியங்கள், காப்பியத் தலைவிகளாக கண்ணகியையும், மணிமேகலையையும் கொண்டு எழுதப்பட்டவை. இதிலிருந்தே, சிறு வயதில் தந்தையின் கட்டுப்பாடுகள், இளம் வயதில் கணவனின் கட்டுப்பாடுகள், முதுமையில் மகனின் கட்டுப்பாடுகள் என்ற வட்டங்களுக்குள் சுழல்வதுதான் பெண்ணின் சரித்திரம் என்ற மனுதர்மக் கொள்கையைத் தமிழகம் ஜீரணிக்கவில்லை என்பதை உணர்த்துகிறது. சிறப்புப் பெறும் மகளிரைத் தமிழகம் போற்றத் தயங்காது.

**'வையத்துள் வாழ்வாங்கு**
**வாழ்பவன் வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப்**
**படும்'**

என்ற வள்ளுவர் கூற்று ஆணுக்கும், பெண்ணுக்கும் பொது என்பதை நமக்கு நன்கு உணர்த்த எழுந்த சான்றுகளே ஆங்காங்கே காணும் கண்ணகி கோவில்கள்; அவை, ஆண்களும் பெண்களும் எல்லோரும் ஒருமிக்க வழுத்தி வணங்கும் கோவில்களாகத் திகழ்கின்றன. காப்பியத் தலைவர்களைச் சுற்றித்தான் பல நாடுகளில் எழுதப்பட்டுள்ளன என்று குறிப்பிட்டேன்.

சமயம் என்று எடுத்துக் கொண்டாலும், இந்து மதத்தைப் பொறுத்தவரையில் இறைவனை எவ்வுருவிலும், எப்பெயரிலும் வழிபடலாம். இதை ஒரு ஏற்றுக்

கொள்ளப்பட்ட தத்துவமாக நாம் மதிக்கிறோம். கிறித்துவ சமயம், மற்றும் இஸ்லாமிய சமயம் போன்ற தந்தை வழி சமுதாயங்களில் தோன்றிய மதங்கள் யாவும் இறை பொருனை ஆணாகப் பாவித்துத்தான் வழி படுகின்றன. ஆனால், இந்தியா வில், இறை பொருளை அன்னையாக, உயிர்களுக்கு எல்லாம் தாயாகப் பாவித்து சக்தி வடி வாய்த் தொழும் பழக்கம் தொன்றுதொட்டு இன்று வரை பரவலாக அனுசரிக்கப்பட்டு வருகிறது.

மேலை நாடுகளில் பல உரிமைகளுக்காகப் பல போராட்டங்கள் நடத்தப்பட்டுள்ளது. Feminism அல்லது பெண்ணியல் என்ற ஒரு துறையே இப்போது உருவாகி விட்டது. ஆராய்ச்சிப் பொருளாக ஏற்றுக்கொள்ளப்பட்டு விட்டது இந்தத் துறை. தமிழ் நாட்டிலும் பெண்ணியல் துறை ஆய்வுக்கென ஒரு தனிப் பல்கலைக் கழகம் உருவாக்கப்பட்டிருக்கிறது. அதுதான் அன்னை தெரசா பல்கலைக் கழகம்.

சமுதாய சமத்துவம், படிப்புரிமை, வாக்குரிமை என்ற பல உரிமைகளுக்காகப் போராட்டங்கள் நடத்தி உரிமைகளைப் பெற்றுக் கொண்டுவரும் செய்திகள் மேலைநாட்டு வரலாற்றில் இடம் பெற்றுவிட்டன. ஆனால், தமிழ்நாட்டைப் பொறுத்தவரை பெண்ணுரிமைக்காகப் போராட்டங்கள் நடத்தும் அளவுக்கு நிலைமை மோசம் அடைந்துவிடவில்லை.

ஆங்கிலக் கல்வியின் மூலம் தமிழ்நாட்டில் ஊடுருவிய செய்தி விளக்கங்களினால் ஏற்பட்ட தாக்கங்களின் காரணமாக இந்தக் குடியுரிமைக்காகப் போராட்டங்கள் நடத்த வேண்டிய தேவை இந்தியப் பெண்களுக்கு இருக்கவில்லை. பண்டித ஜவகர்லால் நேருவும், அம்பேத்கரும் மக்களாட்சித் தத்துவத்தில் ஆழ்ந்த நம்பிக்கை உள்ளவர்களாக இருந்ததினால் சட்ட வரைவுகளை முதன் முதலில் நிர்ணயிக்கும் கால கட்டத்திலேயே, 21 வயதிற்கு மேற்பட்டவர்கள் அனைவருக்குமே வாக்குரிமை வழங்கப்படலாம் என்று நிர்ணயிக்கப்பட்டது. அது மேலும் மாற்றங்கள் பெற்று, இன்று 18 வயதிற்கு மேற்பட்டவர்கள் யாவருமே வாக்குரிமை பெற்றவர்களாகத் திகழ்கிறார்கள். வயதின் அடிப்படையில்தான் வாக்குரிமை வழங்கப்பட்டிருக்கிறதே தவிர ஆண், பெண் என்ற வேறுபாடு மேற்கொள்ளப்படவில்லை, என்றாலும் மிகுந்த சுமையும் போட்டிகளும் நிறைந்த வாழ்க்கை நெறியில் மத்திய மற்றும் மாநில ஆட்சி, ஆங்காங்கே நிகழும் நீதி நிர்ணயங்களிலும், பல நிலைகளிலும், மகளிருக்குப் போதுமான வாய்ப்புக் கிடைத்து விட்டன என்று இன்னமும் சொல்ல முடியாது. காந்தியடிகள் காட்டிய வழியில், பஞ்சாயத்து ஆட்சி அரசு வரும்போது ஒரு வேளை மகளிருக்கு ஆட்சியில் கருத்துக் கூற அதிக வாய்ப்பு ஏற்படக்கூடும் என்று சிந்திக்கத் தோன்றுகிறது. வரலாற்றுப் பாதையில் என்னென்ன மாற்றங்கள் விளைந்தாலும் அன்றன்று நிலவும் சூழ்நிலைகளுக்கு ஏற்பத் தன்னை மாற்றிக் கொள்ளவும், சமாளிக்கவும், சவால்களையும் ஏற்றுக்கொள்ளவும் வேண்டிய தகுதி, திறமைகளை மகளிர் எளிதில் கடைப்பிடித்து வாழ்க்கையில் வெற்றி கண்டுவிடுகிறார்கள் என்ற செய்தியே பெண்களின் பெருமைக்குச் சிறந்த எடுத்துக்காட்டு.

**'அட்டிலைகளும்,**
**அடுப்பினை ஊதுதலும் கரிய**
**சட்டி தேய்த்தலும் மட்டுமே,**
**மாதர் தம் கடனென்ற**
**கருத்தை வெட்டி**
**வீழ்த்தும், சமர் செய்ய**
**நேரிலும்,**
**சவாலை ஏற்கமகளிரால்**
**முடியும்'**

—என்று எடுத்துக்காட்டும் வகையில் காவல் துறையிலும், படை வீரர்கள் மத்தியிலும், விமானம் செலுத்துவதிலும், பேருந்து ஓட்டுவதிலும், சட்ட மன்றங்கள், கல்லூரி மேடைகளில் முழங்கவும், மகளிர் இன்று முன்வந்துவிட்டார்கள். இந்த வாய்ப்புகளைக் குறைவின்றி நிறைவேற்றித் தரும் ஆற்றல் மகளிருக்கு நிச்சயம் உண்டு என்று இந்த நாடே மட்டுமல்ல, உலகமே அறியும்.

**(எட்டாம் உலகத் தமிழ் மாநாடு 'மகளிர் அரங்கில்' ஆற்றிய உரை.)**

**☆ பெண்ணிற்கு மதிப்பு உரிமை கொடுங்கள் வணக்கம் செலுத்துங்கள். பெண்ணை மதித்துப் போற்றலே நாகரிகம், கட்டுப்படுத்துதல் அடிமைப்படுத்தல் கொடுமையாக நடத்தல் அநாகரிகம்.**

**—தமிழ்த்தென்றல் திரு.வி.க.**

கோவை மாவட்டம்:

# பிற்பட்டோர் நலம்

பிற்பட்டோர் நலம் என்பது பொதுவான தலைப்பானாலும், இது குறிப்பாக பிற்பட்டோர் நலம் மற்றும் மிகப்பிற்பட்டோர் நலம் என்ற இரண்டு தனிப் பிரிவுகளைக் கொண்டதாகும். இந்த இரண்டு பிரிவுகள் சம்பந்தப்பட்ட திட்டங் களை அரசு மட்டத்தில் பிற்பட் டோர் மற்றும் மிகவும் பிற்பட்டோர் நலத் துறை என்ற ஒரு அரசுத் துறை யின் மூலம் செயல்படுத்தப்பட்ட போதிலும், இந்த இரண்டு பிரிவின ருக்கான திட்டங்களை முனைப்பாக வும் சீராகவும் செயல்படுத்த மாநில நிர்வாக மட்டத்தில் பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சிறுபான்மை யினர் நலம் மற்றும் மிகவும் பிற் படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மர பினர் நலம் என்று இரண்டு இயக்கு நர்களின் கீழ், இரண்டு இயக்க கங்கள் செயல்படுகின்றன.

ஆனால், மாவட்ட மட்டத்தில் இந்த இரண்டு பிரிவினருக்குமான திட்டங்களைச் செயல்படுத்தும் பணியினை மாவட்டப் பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சிறுபான்மை யினர் நல அலுவலர் மட்டுமே கீழ்க் கண்டவாறு மேற்கொண்டுள்ளார்:

இவ்விரண்டு பிரிவினருக்கும் பொதுவான கீழ்க்கண்ட திட்டங்கள் கோயம்புத்தூர் மாவட்டப் பிற்பட் டோர் நல அலுவலகத்தால் செயல் படுத்தப்படுகின்றன.

1. கல்லூரி மற்றும் பள்ளி மாண வர் விடுதி நடத்துதல்.

2. தகுதியுடைய மாணவர் களுக் குக் கல்வி உதவித்தொகை வழங்கு தல்.

3. விடுதியில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு இலவசச் சீருடை வழங்குதல்.

4. 9 மற்றும் 10-ஆம் வகுப்பு மாணவர்களுக்கு இலவசமாகப் பாடப் புத்தகங்கள் வழங்குதல்.

5. மாவட்ட அளவில் அதிக மதிப்பெண்கள் பெறுபவர்களுக்கு ஊக்கப் பரிசு வழங்குதல்.

6. தொழில் சார்ந்த திட்டத் தின்கீழ் தகுதியுடையவர்களுக்குச் சுருக்கெழுத்து மற்றும் தட்டச்சுப் பயிற்சி அளித்தல்.

7. +2 தேர்ச்சி பெற்று தொழிற் கல்வி பயிற்சி பெற, நுழைவுத் தேர்வு எழுத இருப்பவர்களுக்கு முன்பயிற்சி அளித்தல்.

மிகப் பிற்பட்ட மற்றும் சீர்மரபினர்களுக்காகக் கீழ்க்கண்ட சிறப்புத் திட்டங்கள் செயற்படுத்தப் படுகின்றன:

1. ஒரு குடும்பத்தின் முதல் பட்டதாரியானால், கல்விக் கட்ட ணம் முழுவதிலிருந்தும் விலக்களித் தல்.

2. நலிவுற்ற சமுதாயத் தொழி லாளர்களுக்குச் சலவைப் பெட்டி, சவரக் கருவிகள், போயர் கருவிகள், குலாலர் கருவிகள் இலவசமாக வழங்குதல்.

3. சவரத் தொழிலாளர்கள் சவரக்கடை அமைக்க அரசு மானி யம் ரூ.1,500 உடன் ரூ.5,000 வங்கிக் கடன் வழங்குதல்.

---

☆ ஒவ்வொருவரும் தத்தம் வாழ்நாள் முழுவதும் மாணவன் போலவே கற்க வேண்டும். தனக்கென்று ஒரு நூல் நிலையம் வைத்திருக்க வேண்டும். தன்னைச் சுற்றிலும் உள்ள வறியவர்களுக்கு உதவ வேண்டும்.

☆ ஒவ்வொரு மனிதனும் பண்பாடுள்ள குடிமகனாக இருக்க வேண்டும். மனிதனைப் பகுத்தறிவுள்ளவனாக மாற்றுவது எப்படி என்பதுதான் சமுதாயத்தின் முக்கியச்சிந்தனையாக இருக்க வேண்டும்.

–டாக்டர் அம்பேத்கர்

4. வீடற்ற எளிய பிரிவினருக்கு நில எடுப்புச்செய்து இலவச வீட்டு மனை வழங்குதல்.

மேற்படி திட்டங்களின் மூலம் பயன்பெறுபவர்கள் மாணவர் களாயின் அவரது பெற்றோரது ஆண்டு வருமானம் தனிப்பட்ட நப ராயின் அவரது ஆண்டு வருமானம் ரூ.12,000-க்கு மேல் இருக்கக்கூடாது.

பிற்பட்டோர் மற்றும் மிகப் பிற்பட்டோர் நலப் பிரிவு மக்களில் தனி நபர் சிறு தொழில் தொடங்கத் தமிழ்நாடு பிற்பட்டோர் பொருளா தார மேம்பாட்டுக் கழகத்தின் மூலமாக ரூ.1,00,000 வரை கடன் வழங்கும் திட்டம் 1993-94-இல் அமல்படுத்தப்பட்டு வருகிறது. இத் திட்டத்தின் மூலம் பயன்பெறு பவரது ஆண்டு வருமானம் ரூ.22,000-க்கு மிகுதல் கூடாது.

இம்மாவட்டத்தில் பிற்படுத்தப் பட்டோர் நலத்துறை மூலம் 16, மிகப் பிற்படுத்தப்பட்டோர் துறை மூலம் 10, ஆகக் கூடுதல் 26 மாணவ மாணவியர் விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் 3 கல்லூரி மாணவர் விடுதிகள் 7 பள்ளி மாணவியர் விடுதிகள் அடக்க மாகும். இந்த விடுதிகளில் மொத்தம் 1,400 மாணவ மாணவியர் தங்கிப் பயில அனுமதிக்கப்பட்டுள்ளது.

பள்ளி விடுதியில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு, ரூ.120-ம் கல்லூரி விடுதியில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு ரூ.175ம் மாத உணவுக் கட்டணமாக 30.11.94 வரை வழங்கப்பட்டு வந்தது. இதன் பின்னர் அதாவது 1.12.94 முதல், இந்தக் கட்டணம் முறையே ரூ.135 மற்றும் ரூ.198 என உயர்த்தப் பட்டுள்ளது.

கோவை மாவட்டத்தில் 1993-94-ஆம் ஆண்டில் விடுதி மாணவர்களுக்குச் சீருடை வழங்கியதில் பிற்பட்டோர் நலத்தினர் 608 மாணவர்களும், மிகவும் பிற்பட்டோர் மற்றும் சீர் மரபினர் 413 மாணவர்களும், அதைப்போல் 1994-95-ஆம் ஆண் டில், பிற்பட்டோர் நலத்தினர் 536 மாணவர்களுக்கு மிகவும் பிற்பட் டோர் மற்றும் சீர்மரபினர் 452 மாணவர்களும் பயனடைந்து உள்ளனர்.

கல்வி மேம்பாட்டுக்காகக் கல்வி உதவித் தொகைத் திட்டத்தில் 1993-94-ஆம் ஆண்டில் பிற்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 12,657. மிகவும் பிற்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவர்களின் எண் ணிக்கை 7,922 ஆகும்.

தமிழ்நாடு பொருளாதார மேம் பாட்டுத் திட்டத்தின்கீழ், இவ்வலு வலகத்தால், கடன் விண்ணப் பங்கள் சரிபார்க்கப்பட்டு கழகத் திற்கு அனுப்பி வைக்கப்படு கின்றன. திட்டம் தொடங்கியது முதல் 550 விண்ணப்பங்கள் சரி பார்க்கப்பட்டு அனுப்பி வைக்கப் பட்டுள்ளன.


எங்கள் இதயங்கனிந்த நல்வாழ்த்துக்கள்:

# தியேட்டர் கீதாலயா


சாஸ்திரி ரோடு

கோயம்புத்தூர் - 9

போன்: 236266

# திரை உலகின் திருக்குறள்!

## –கவிஞர் முத்துலிங்கம்




ஜெயலலிதா என்ற சிறந்த சொல்லுக்கே
வெற்றித் திருமகள் என்பதே அர்த்தம்!
ஜெயம் என்றால் வெற்றி
லலிதா என்றால் சக்திகளுக்கு உரிய பெயர்,
பெயருக்குள்ளேயே வெற்றி இருக்கையில்
இவரை எதிர்ப்பவன் எவன் வெற்றி
பெறுவான்?

புரட்சித் தலைவி ஒரு பூகம்ப விதை,
பூமிக்குள் இவ்விதையைப் புதைத்து விட
முடியுமா?
புரட்சித் தலைவி ஒரு ஆகாயம்,
ஆகாய நீலத்தை அழித்து விட முடியுமா?
இந்தியாவே வியக்க இந்நாட்டை ஆட்சி
செய்யும்

சந்தியா தாய்பெற்ற தமிழ்ச்செல்விக்கு
என்வணக்கம்.
பாமாவை ருக்மணியை அறிந்த
கிருஷ்ணன் பழங்கால கிருஷ்ணன்,
இந்த கு.பா. கிருஷ்ணன்
தேமாவை புளிமாவை அறிந்த கிருஷ்ணன்;
இவன் சிறப்பான புலமைக்கு எனது
வாழ்த்து!

முத்தமிழின் பட்டியலை முன்னிலையில்
நின்று
தித்திக்கச் சொன்ன தென்னவன்
அவர்களே!
சான்றாண்மை உடைய சபையோரே!
அரங்கிலுள்ள ஆன்றோரே அமைச்சர்களே!
அனைவர்க்கும் என் வணக்கம்.

எட்டுக்கோட்டை கட்டி இவ்வுலகை
ஆண்டாலும்,
பட்டுக்கோட்டை கட்டிய பாட்டுக்
கோட்டைக்கு



ஈடாக மாட்டாது!
இவனது கவிக்கோட்டை அறிவுச்சுடர்
வீசும் பொற்கோட்டை!
கருத்திலே புதுக்கோட்டை!
தஞ்சை நெற்கோட்டைபோலே
நெடியவயல் தரும் கோட்டை!
முக்கோட்டை போன்ற மூட மனங்களைத்
தகர்க்கும் விற்கோட்டை!
பல கற்கோட்டை போலே காணாமல்
போகாமல்,
இவரது சொற்கோட்டை என்றும்
சூரியன்போல் நிலைத்திருக்கும்.
செங்கோட்டையாலே ஜெயிக்க முடியாத
செயிண்ட் ஜார்ஜ் கோட்டைபோல்
திகழ்பவன் பட்டுக்கோட்டை!
மலர்க்கோட்டை போன்ற கவிஞர்கள்
மத்தியிலே
திருச்சி மலைக்கோட்டை போலே
மாண்பில் உயர்ந்தவன்!
ஏறத்தாழ இருநூறு படத்திற்கு
உரையாடல் தீட்டிய உரையாடல் ஆசிரியர்
ஏ.எல். நாராயணன் என்பவராலே
பட்டுக்கோட்டை பட உலகில் நுழைந்தார்!

இவனுக்கு நிகராக எழுதியவர் திரையுலகில்
அன்றைக்கும் இல்லை, இன்றைக்கும்
இல்லை!
மதுவுடைமைக் கொள்கை மலிந்திருந்த
திரையுலகில்
பொதுவுடைமைக் கொள்கையைப் புகுத்திய
பெருங்கவிஞன்!

கண்ணதாசனுக்குப் பின் கலையுலகில்
வந்தாலும்
கண்ணதாசனுக்குப் பின் கலையுலகில்
புகுந்தாலும்
கண்ணதாசனையே பாட்டில் கடந்தவன்
இவன்தான்!
கண்ணதாசன் தமிழோ கவிதைத் தமிழ்
பட்டுக்கோட்டையின் தமிழோ பாட்டாளித்
தமிழ்!



உவமைகளின் சித்திரிப்பு கண்ணதாசன்
பாடல்;
உணர்ச்சிகளின் கொந்தளிப்பு
பட்டுக்கோட்டையின் பாடல்!
கண்ணதாசன் பாடலில் இருந்தது வனப்பு;
பட்டுக்கோட்டை பாடலில் இருந்தது
நெருப்பு!
பாட்டாளித் தோழருக்கு இவன் பாடல்
கற்கண்டு!
தனியுடைமைக் கொள்கைக்கு இவன்
பாடல் வெடிகுண்டு!

இதுவரை படத்திற்கு இவன் வரைந்த
பாடல்கள்
இருநூற்றைம்பதுதான்!

இருநூற்றைம்பதுதான் எனக்குத்
தெரிந்தவரை!
இன்னும் கொஞ்சம் சேர்த்தாலும்
முந்நூறுக்கும் குறைவாய்த்தான்
மொத்தமே இருக்கும்!
இரண்டாயிரம் பாடல் எழுதியவன்
பெரும்புகழை
இருநூற்றைம்பது பாடலே எழுதிப்
பெற்றான் என்றால்
இவன் பாட்டின் கருத்துத்தான் இதற்குக்
காரணம்!

பட்டுக்கோட்டை படவுலகில் எழுதியது
எட்டாண்டுக் காலம்தான் என்றாலும்

இவனைப்போல் எழுச்சி மிகுந்த இதயந்
தூண்டுகின்ற
புரட்சிக்கருத்தைப் பொழிந்தவர்கள்
எவருமில்லை!

சிந்தனையைக் கொதிப்பாக்கி
இரத்தத்தைச் சூடேற்றும் சுந்தகக் கிடங்கு
இவன் சந்தங்கள் ஆகும்!
திருக்குறளை மனப்பாடம்செய்வதுபோல்
தொழிலாளர் மனப்பாடம் செய்தது
மண்ணில் இவன் பாட்டைத்தான்!

"வசதி இருக்கிறவன் தர மாட்டான்
அவனெ வயிறு பசிக்கிறவன்
விடமாட்டான்"
காரல் மார்க்சின் கம்யூனிச சித்தாந்தத்தை
இந்த இரண்டு வரியிலே இவனைப்போல்
எவன் சொன்னான்?

திரை உலகில் —
திரைப்படக் கவிஞர்கள் இன்று தீட்டும்
பாடலோ
மக்கள் அறிவை மட்டுமே தொடுகின்ற
பாடல்;
கல்யாணசுந்தரம் பாடிய பாடலோ
மக்கள் உள்ளத்தைத் தொட்டு ஊடுருவிய
பாடல்!
மக்கள் உணர்வினை வார்த்தையில்
வடித்ததால் இவனை
மக்கள் கவிஞன் என்று மக்களெல்லாம்
அழைத்தார்கள்.
எத்தனையோ திலகங்கள் இருந்தாலும்
எம்.ஜி.ஆரே மக்கள் திலகம் என்று
மக்களன்று அழைத்தது போல்,
மக்கள் கவிஞரென்று மாநிலத்தில் இவரை
அழைத்தார்கள்!

நாட்டு நடப்புகளை நன்றாக ஆராய்ந்து
பாட்டுப் புனைந்தவன் பட்டுக்கோட்டை!
இன்றைக்கும் நாளைக்கும் என்றைக்கும்
பொருந்தும்வண்ணம்
அன்றைக்கே பாடிவைத்தான்
அதிலே ஒரு பாட்டு —

"எல்லோரும் நம்பும்படி சொல்லும்
திறனிருந்தால்
சொல்லிலே உண்மை இல்லே;
உள்ளதை உள்ளபடி உரைக்கும் மனிதனிடம்
உணர்த்திடும் திறமை இல்லே;
உண்மையும் நம்பவைக்கும் திறனும்
அமைந்திருந்தால்
உலகம் அதை ஏற்பதில்லே;
அது இருந்தா இது இல்லே, இது இருந்தா
அது இல்லே;
அதுவும் இதுவும் சேர்ந்திருந்தா
அவனுக்கிங்கே இடமில்லே!"

"பொதுப்பணியில் செலவழிக்க
நினைக்கும்போது பொருளில்லே
பொருளும் புகழும் சேர்ந்தபின்னே
பொதுப்பணியில் நினைவில்லே
போதுமான பொருளும் வந்து
பொதுப்பணியில் நினைவும் வந்தா
போட்ட திட்டம் நிறைவேற கூட்டாளிகள்
சரியில்லே!"

—இதைப்போல எத்தனையோ இவன்பாடிச்
சென்றுள்ளான்,
காதல் என்ற போர்வையில் காமத்தைத்
தூண்டுகின்ற பாடலைத்தான்
என்போன்றோர் படங்களில் எழுதுகிறோம்!
காதல் பாட்டிலும் கவலையிலே தேயும்
தொழிலாளர் சிந்தனையைச்
சொல்லியவன் இவன்தான்!

"சும்மா கிடந்த நிலத்தக் கொத்தி
சோம்பலில்லாமல் ஏர் நடத்தி
கம்மாங்கரையை உசத்திக் கட்டி
கழனிக்கொல்லையில் வாய்க்கால் வெட்டி
சம்பாப் பயிரைப் பறிச்சு நட்டு
தகுந்த முறையில் தண்ணீர் விட்டு



நெல்லு வெளஞ்சிருக்கு, வரப்பு உள்ள
மறஞ்சிருக்கு"

"அட, காடு வெளஞ்சென்ன மச்சான்
நமக்கு கையும் காலுந்தானே மிச்சம்
காடு வௌயட்டும் பொண்ணே,
நமக்குக் காலம் இருக்குது பின்னே!"
-நாடோடி மன்னனில் நல்லதொரு
பாடலிது!

காதல் பாட்டிலும் இதைப் போன்ற கருத்தை
எம்.ஜி.ஆர். என்பதால் ஏற்றுக் கொண்டார்.
இதுபோல் நாங்கள் இன்றைக்கு எழுதினால்
தயாரிப்பாளர் சம்மதிப்பாரா?
அதனால்தான்
"தரைமேல் பிறக்க வைத்தான்
எங்களைத் தண்ணீரில் பிழைக்க
வைத்தான்
தரைமேல் இருக்க வைத்தான்
எங்களைக் கண்ணீரில் குளிக்க
வைத்தான்!"
என்றெல்லாம் படகோட்டி படத்திலே
பாடல் எழுதிய கவிஞர்கள்-
"எப்படி எப்படி சமஞ்சது எப்படி
இப்படி இப்படி சமஞ்சது இப்படி"
என்றெல்லாம் இன்று எழுதுகின்றனர்.

காசு வருமென்றால் கழுதையைக்கூட
குதிரை என்று கூறுகின்ற காலமிது.
ஆனால் பட்டுக்கோட்டை எந்த நிலையிலும்
இதுபோல்

இறங்கிப் பாடல் எழுதிப் பிழைத்தவன்
அல்லன்.
அவனது காலத்தில் வார்த்தைக்கும்
கருத்துக்கும்
முதலிடம் இருந்தது;
எங்கள் காலத்தில் வாத்தியக் கருவிக்கே
முதலிடம் உள்ளது;
அன்றைய பாடல்கள் தெளிவாக நமது
செவியில் கேட்டதற்கும்
இன்று கேட்காமல் இருப்பதற்கும் இதுதான்
காரணம்!

இவன் வரைந்த பாட்டுக்கே
இசையமைப்பாளர்
மெட்டுக்கள் போட்டு மிளிர வைத்தனர்.
நூற்றுக்கு எண்பது பாடல்கள்
இவன் எழுதிய
பிறகு இசையமைத்த பாடல்கள்.
இவன் முதன்முதலில் மெட்டுக்கு மொழிந்த
பாடல்
"சின்னச்சின்ன இழை பின்னிப்பின்னி
வரும்
சித்திரக் கைத்தறி சேலையடி"
என்ற பாடல்தான். இது புதையல் படத்தில்
வரும்!

நானும் புலமைப்பித்தனும் திரைத்துறையில்
அடிவைத்து நுழைந்த ஆரம்ப நாளிலேயே,
மெட்டுக்குத்தான் பாட்டுக்கட்டினோம்.
மெட்டுக்குப் பாட்டுக் கட்டுதல் என்பது
இலக்கணக் கட்டுக்குள் நின்று
கவிபுனைவதிலும் கடிது.
இங்கே சிலபேர் எண்ணுவதைப்போல்
அது சுலபமான தொழில் அல்ல,
குருவிக்கரம்பை சண்முகம், மேத்தா,
பொன்னடியான்
போன்றவர்களெல்லாம் மெட்டுக்குத்தான்
முதலிலே எழுதி நுழைந்தார்கள்.
இது சுலபமான தொழில் அல்ல.
அதனால்தான் இலக்கியக் கவிஞர்கள்
எத்தனையோபேர்

கலைத்துறைதன்னில் காலடி வைத்தும்
வெல்ல முடியாமல் விலகிப் போய்
விட்டனர்.
எங்களைப் போன்றோர்
இருக்கின்றோமெனில்
திரைப்பாடல் நுட்பத்தைத் தெரிந்து
கொண்டவர்கள் அவ்வளவே!
பட்டுக்கோட்டை—
பள்ளியில் அதிகம் படிக்காதபோதும்,
அனுபவப் பள்ளியில் அதிகம் படித்தவர்.
இவனுக்கிருந்த சிந்தனைக் கூர்மை
ஐ.ஏ.எஸ். படித்த அதிகாரிக்கில்லை!
படிப்பு வேறு, அறிவு வேறு.
பட்டப் படிப்பு படிக்காதவர்கள்தான்
அகிலத் தலைவராய் அறிவியல் மேதையாய்
உலக அளவில் உயர்ந்திருக்கிறார்கள்.

அதிகம் படித்த அறிவாளி என்பவன்
நம்மையும் இந்த நாட்டையும் ஏய்ப்பவன்
இதற்கு, இந்திய நாட்டின் ஏவுகணை
ரகசியத்தை
வெளிநாட்டுக்கு விற்ற விஞ்ஞானியே
சாட்சி!
படிக்காதவர்களே பாவ புண்ணியம் பார்த்து
நடக்கும் பண்புள்ளவர்கள்—
பட்டுக்கோட்டையே இதைப் பாடலிலும்
சொல்வான்

"எழுதிப் படிச்சு அறியாதவன்தான் உழுது
உழச்சு சோறு போடுறான்;



எல்லாம் படிச்சவன் ஏதேதோ பேசி நல்லா
நாட்டைக் கூறு போடுறான்!
இவன் சோறு போடுறான், அவன்
கூறுபோடுறான்!"

—மண்ணின் மணத்தை மருதகாசி
போன்றவர்கள்
பண்ணில் வைத்துப் பாடினார்கள்
என்றாலும்,
வாழ்வியல் தத்துவத்தின் வளமான
கருத்தைப்
பாமரத் தமிழில் பாடியவன் இவன்தான்!
"குட்டி ஆடு தப்பி வந்தா குள்ளநரிக்குச்
சொந்தம்;
குள்ளநரி மாட்டிக்கிட்டா குறவனுக்குச்
சொந்தம்;
தட்டுக்கெட்ட மனிதர் கண்ணில்
பட்டதெல்லாம் சொந்தம்

சட்டப்படி பார்க்கப்போனா எட்டடிதான்
சொந்தம்
உனக்கெது சொந்தம் எனக்கெது சொந்தம்
உலகத்தில் எதுதான் சொந்தமடா!

ஆட்டிலே குட்டி ஊட்டு மறந்தா
அதோட சொந்தம் தீருமடா!
கூட்டிலே குஞ்சு பறக்க நினைத்தா
குருவியின் சொந்தம் மாறுமடா

காலை நீட்டியே வைத்து நெருப்பிடும்போது
நேசம் பாசம் பொருள் ஆசைக்கெல்லாம்
காட்டிய ஒருபிடி வாய்க்கரிசியிலே
கணக்குத் தீர்ந்திடும் சொந்தமடா"—
இப்படி அருமையாய் எழுதியவன் அவன்!

"பொறக்கும்போது பொறந்த குணம்
போகப்போக மாறுது
எல்லாம் இருக்கும்போது பிரிந்த குணம்
இறக்கும்போது சேருது!
பட்டப்பகல் திருடர்களைப் பட்டாடைகள்
மறைக்குது!

ஒரு பஞ்சாயந்தான் எல்லாம் சேந்து
திருடனென்றே உரைக்குது
நாம் எப்போ போறோன்னு தெரியாம
வாழ்வின் கணக்குப் புரியாமே ஒண்ணு
காசை எண்ணிப் பூட்டுது!
ஆனா, காதோரம் நரச்ச முடி கதை
முடிவைக் காட்டுது!"
–பட்டுக்கோட்டையின் இந்த பாடலை
எம்.ஜி.ஆர். அவர்கள்
என்னிடம் பலமுறை கூறிப்
பாராட்டியிருக்கிறார்.
இதைவிட அவனுக்குச் சிறப்பென்ன
வேண்டும்?

'கரு உலகில் உருவாகி மறு உலகில் வரும்
நாளைக்
கண்டறிந்து சொல்வாருண்டு
இந்தத் திருவுடலில் குடியிருக்கும் ஈசன்
பிரியும் நாளை
தெரிந்தொருவர் சொன்னதுண்டோ?
வருவனவும் போவனவும் விதி என்று
வைத்தவன்
வாழ்வினை விதைத்த உழவன்
அவன் அறுவடைக் காலத்தில் அழுதாலும்
தொழுதாலும்
அனுதாபம் காட்டுவானோ?"–

இத்தகைய அவனது தத்துவங்கள்
அத்தனையும்
சந்தனப் பூங்கொத்துக்கள்!
கத்து கடல் முத்துக்கள்!
கரும்புத்தேன் சொட்டுக்கள்!

பொன்மனச் செல்வி புரட்சித் தலைவி
ஆட்சி செய்யும்
இந்நாளில் அவன் வாழ்ந்திருந்தால்,
மாட்சிபல பெற்றிருப்பான், மகத்துவங்கள்
கண்டிருப்பான்.
ஆயினும், இதுவரை இங்கே அமைந்த
அரசுகளில்

- பிறநாட்டு நல்லறிஞர்
சாத்திரங்கள் தமிழ்மொழியிற்
பெயர்த்தல் வேண்டும்;
இறவாத புகழுடைய
புதுநூல்கள் தமிழ்மொழியில்
இயற்றல் வேண்டும்.

☆ வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே.
☆ எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழிய வே.
☆ வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ் மொழி
வாழ்க தமிழ்மொழி யே.

-மகாகவி பாரதியார்

பட்டுக்கோட்டையைப் பாடுபொருளாய்
வைத்த அரசு
நமது தலைவியின் அரசுதான்!
அதற்காக நான் இந்த அரசைப்
போற்றுகிறேன்;
எந்தப் பாடல் எதுவானாலும்
அந்தப் பாடலில்
அரியபெரும் கருத்தைக் கட்டி வைத்தவன்
கல்யாணசுந்தரம்.

இவனது பாடல் எப்படிப்பட்டது?
சுருக்கமாகச் சொல் என்றால்,
அது திரை உலகத்தில் திருக்குறள்
என்பேன்!
ஆம். அது கரையில்லாத கங்கைநதிப்
பெருக்கம்;
திரைப்படக் கவிதைக்கே அதுவொரு
இலக்கண விளக்கம்.
வணக்கம்.
–2.1.1995 அன்று தஞ்சையில் நடைபெற்ற
எட்டாம் உலகத் தமிழ் மாநாட்டுக்
கவியரங்கில் பாடிய கவிதை.

மருத்துவக் கட்டுரை:

# பெண்களும் சர்க்கரை நோயும்

டாக்டர் அ. பன்னீர்செல்வம், எம்.டி., டி.டயாப்.,

மண்டலச் செயலாளர், இந்தியச் சர்க்கரை நோய்க் கழகம்.

'சர்க்கரை வியாதி' என்று சொல்லும்போது இனிப்பாகத் தெரிந்தாலும், அந்நோய் ஏற்படுத்தும் தொல்லைகள் உயிருக்கும் உலைவைக்கும் அளவிற்குத் தீயவை ஆகும். அதிலும் குறிப்பாகப் பெண்களுக்கு இந்த நோயால் விளைகின்ற தொல்லைகள் அதிகம். அதை விளக்கும் கட்டுரையாகும் இது.

'சர்க்கரை வியாதி' என்பது பொதுவான ஒரு நோய் ஆகும். ஆண் பெண் இருபாலரையும் பாதிக்கக்கூடியது இது. வயது வேறுபாடின்றி - அதாவது சிறுவர்கள், பெரியவர்கள்– கிராமம், நகரம் என்று பாராமல், ஏழை, பணக்காரார் என்ற வித்தியாசமும் இல்லாமல், அனைத்து மதத்தினரையும், அனைத்து நாட்டினரையும் சற்று விகிதாச்சார வித்தியாசத்துடன் பாதிக்கக் கூடிய, உலகமெங்கும் காணப்படும் மிகப் பழம்பெரும் நோய் ஆகும். 'எய்ட்ஸ்' என்னும் உயிர்க் கொல்லி நோய் போலப் புதியதோர் நோய் அல்ல இது!

இப்படிப்பட்ட இந்தச் சர்க்கரை நோயினால், பெண்களுக்கு எந்த அளவிற்குத் தொல்லைகள் ஏற்படுகின்றன; அவர்கள் அவற்றை எவ்வாறு சமாளிக்கலாம் என்பதை இங்கே பார்ப்போம். "மகளிர் மட்டும்" என்று இருப்பது போல், இந்நோயினால் அவர்களுக்கு மட்டும் சில தனிச் சிறப்புத் துன்பங்கள் உண்டு.

## சிறுமிகளும் சர்க்கரை நோயும்

சிறுவர்களைத் தாக்குகின்ற இந்த நோய்க்கு "ஜீவனைல் டயபிடிஸ்" (Juvenile Diabetes - IDDM - Insuline Dependent Diabetes Mellitus) என்று பெயர்.

இவர்களுக்கு இன்சுலின் சுரப்பே இருக்காது. இன்சுலின் சுரக்கும் உயிரணுக்கள் பீட்டா செல்கள் முற்றிலுமாக, நிரந்தரமாகச் செயலிழந்து விடுகின்றன. ஆகவே, இவர்கள் வாழ்நாள் முழுதும் இன்சுலின் ஊசியை நம்பியே இருக்கவேண்டியுள்ளது. இன்சுலின் ஊசி போட்டுக் கொள்ளவில்லையெனில் இவர்களுக்கு வாழ்வில்லை, உயிரும் இல்லை!

இதுபோன்ற ஒரு கொடிய நோய் பெண் குழந்தைகளுக்கும், சிறுமிகளுக்கும் வந்தால், அக் குழந்தையின் நிலை ஒருபுறம் இருக்க, பெற்றோர்கள் நிலைமையை எண்ணிப் பார்த்தால் அவர்கள் படும் சிரமம் கணக்கில் அடங்காது.

பெற்றோர்களோ இதனால் ஆயிரக்கணக்கான கேள்விகளின் மூலம் மருத்துவர்களைத் துளைத்தெடுத்து விடுவார்கள்.

எவ்வளவு நாள் ஊசி போட்டுக் கொள்வது?

மற்ற மருந்துகள் போல் இதற்கு மாத்திரை வடிவில் சிகிச்சை கிடையாதா?

தினந்தோறும் போடத்தான் வேண்டுமா?

ஒரு வேளை போட்டால் போதாதா?

படிப்பு எப்படி? விளையாட்டு, நடனம், பழகுதல் போன்றவை எப்படி?

திருமணம் செய்யலாமா கூடாதா?

குடும்ப வாழ்க்கை எப்படி?

- இது போன்ற கேள்விகள் அவற்றுள் சில.

இவர்களது அத்தனைக் கேள்விகளுக்கும் சவாலாக, இந்த நோயுடன் நோயற்று ஒரு நபர் போல் வாழ முடியும் (Normal Life Despite Diabetes) என்ற ஒரு மனப்பக்குவத்தை நோய் பாதித்த சிறுமிக்கும், அவரது பெற்றோருக்கும் சிகிச்சை செய்யும் மருத்துவர் ஏற்படுத்தியாக வேண்டும். இப்போதைய மருத்துவ வளர்ச்சியில் பெரியம்மை நோயை ஒழித்ததைப்போல் இந்தச் சர்க்கரை நோயை அறவே ஒழிக்க முடியவில்லை. எனினும் இந்நோய் இருந்தும், நோயற்ற நபர் போல் வாழலாம். நோயற்றவர்களைப் போல் படிக்கலாம். விளையாட்டு, நடனம் முதலியவற்றில் தாராளமாக ஈடுபடலாம்.

இவர்கள் எல்லா நேரங்களிலும் இந்த நோயைக் கட்டுப்பாட்டில் வைத்திருந்தால், மேற்கூறிய அனைத்தும் சாதாரணமானவைகளே. 'இன்சுலின்' ஊசி 'ஆண்டிபயாடிக்' இல்லாத காலகட்டங்களில் இந்நோய் பாதித்த அனைவரும் இறந்துள்ளனர்.

**இந்நோயின் அறிகுறிகள்**

இந்நோய் சிறுமிகள், சிறுவர்கள் மத்தியில் இருப்பதை எவ்வாறு தெரிந்துகொள்வது என எல்லோரும் அவசியம் தெரிந்து கொள்ள வேண்டும்.



குழந்தை திடீரென அடிக்கடி அதிகமாகச் சிறுநீர் கழிக்கும். தண்ணீர் மிகவும் அதிகமாக உடனுக்குடன் குடிக்கும்; தாகமே லேசில் அடங்காது. பசி அதிகமாக இருக்கும். அடிக்கடி சாப்பிட்டாலும் சோர்வு அதிகமாக இருக்கும். குழந்தையின் எடையும் திடீரென மிக வேகமாகக் குறையும்.

இந்த அறிகுறிகள் ஆரம்பித்த 24 மணி நேரம் முதல் 48 மணி நேரத்திற்குள் - தக்க சிகிச்சை அளிக்கவில்லையெனில், குழந்தை நினைவிழந்த நிலைக்குச் சென்றுவிடும். சில நேரங்களில் இந்நிலையில் உள்ள குழந்தைகளுக்கு மூளைக் காய்ச்சல் கண்டுள்ளதோ என்று தவறாகச் சந்தேகிக்கப்படுவதும் உண்டு. இந்நிலையில் உள்ள – முக்கியமாகக் குழந்தைகளுக்கு சிறுநீர்ப் பரிசோதனையும், இரத்தப் பரிசோதனையும் செய்து, இந்த நோய் இருப்பதை நிர்ணயம் செய்து, தக்க சிகிச்சையைத் தக்க நேரத்தில் அளித்தால் கண்டிப்பாகக் காப்பாற்ற முடியும்.

மேற்கொண்டு தொடர் பரிசோதனையும், தொடர் சிகிச்சையும் மிகவும் அவசியம். தற்போது மிக எளியமுறையில் - ஒரு துளி இரத்தத்தில், இரு நிமிடத்திற்கு நோய் பாதித்த நபரோ அல்லது அவரைச் சார்ந்தவரோ இரத்தப் பரிசோதனை செய்து பார்த்துக் கொள்ளலாம்.

'இன்சுலின்' ஊசியும் இப்போது மிகவும் எளிமைப்படுத்தப்பட்டுள்ளது; பேனா வடிவில் ஊசிகள் வந்துள்ளன. இவை மூலம் சர்க்கரை நோயைக் கட்டுப்படுத்துவது மிகவும் எளிது. பத்து ஆண்டுகளுக்கு முன்பு இருந்தது போன்ற எந்தவொரு துன்பமும் தற்போது கிடையாது.

**பெண்மணிகளின் நோய்க்கூறு**

முப்பது வயதைக் கடந்த பின்புதான் சில பெண்மணிகளுக்கு இந்நோய் வருகிறது. இவர்களுக்கு உடலில் சுரக்கும் இன்சுலின் அளவு போதுமானதாக இல்லாமல் போவது, அல்லது சுரந்த இன்சுலினைச் சரியாக உபயோகிக்க முடியாமல் போவது தான் இந்நோய்க்கு மூலகாரணமாக அமைகிறது. குடும்பத்தில் அப்பா அல்லது அம்மா அல்லது இருவருக்குமே சர்க்கரை நோய் இருந்தாலும், கர்ப்பத்தின் போது சர்க்கரை நோய் வந்திருந்தாலும், உடல் பருமன் அதிகம் இருந்தாலும் இந்நோய் வர அதிக வாய்ப்புகள் உள்ளன.

இச் சூழ்நிலையில் உள்ள சில பெண்களுக்கு இருபது வயதைக் கடந்த பின் கூட இந்நோய் வந்துவிடுகிறது. இந்த நோயானது பெரும்பாலும் எந்த ஒரு அறிகுறியும் இல்லாமலே உட

லைப் பாதிக்கிறது. இந்நோய் மட்டுமல்ல, இந்த நோயின் பின் விளைவுகள் கூட நோயாளி களுக்குச் சட்டெனத் தெரிவ தில்லை. சிலருக்கு மட்டும் அடிக்கடி சிறுநீர் கழித்தல், சிறுநீர் வெளியாகும் இடத்தில் அரிப்பு, அதிக தாகம் எடுத்தல், நாக்கு வறட்சி, அடிக்கடி அதிகமாகச் சிறுநீர்க் கழித்தல், அதிகப் பசி, சோர்வு முதலிய தொல்லைகள் தெரியும்.

இவ்வாறு இருப்பவர்கள் உட னடியாக இரத்தப் பரிசோதனை, சிறுநீர்ப் பரிசோதனை ஆகிய வற்றின் மூலம் இந்நோய் இருப் பதைச் சந்தேகமின்றி நிர்ணயம் செய்து மருத்துவரிடம் தக்க சிகிச்சை எடுத்துக்கொள்ள வேண்டும். சர்க்கரை நோய் வர அதிக வாய்ப்புகள் உள்ளவர்கள் இந்நோயின் தொந்தரவுகளை எதிர்பார்க்காமல், இருபது வய துக்குமேல் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை சாப்பாட்டின் பிறகு இரண்டு மணி நேரம் பொறுத்து இரத்தப் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். அதன் அளவு 120 மி.கி.க்குக் குறைவாக இருத்தல் வேண்டும். அதிகம் இருந்தால் தவறாமல் தக்க சிகிச்சை மேற்கொள்ள வேண்டும்.

சர்க்கரை நோய் உள்ளது என முடிவு செய்தபின்னால், மருத்துவரின் சிகிச்சையுடன், நோய் பாதித்த பெண்மணியின் ஒத்துழைப்பும், அவரைச் சார்ந்த வர்களின் ஒத்துழைப்பும் மிகமிக அவசியம். வழக்கமாகவே பெண்கள் ஆண்களுக்குப் பறிமாறிவிட்டு மீதமுள்ளதை - அல்லது மீதம் இருந்தால் சாப்பிடும் பழக்க முள்ளவர்கள். சிலநேரங்களில் எதுவும் சாப்பிடாமல் விட்டுவிடு வதும் உண்டு. சில பெண்கள் இனிப்பு வகைகள், கொழுப்புச் சத்து அதிகம் நிறைந்த உணவு வகைகளை அடிக்கடி உண்ணும் பழக்கமுடையவர்களாக உள்ள னர். சிலர் அதிகமாக விரதங் களைக் கடைப்பிடிக்கின்றனர். யார் எந்தப் பழக்கம் உடைய வர்களாய் இருந்தாலும், இந் நோய் உள்ளது எனத் தெரிந்த பிறகாவது உணவில் சில கட்டுப் பாடுகள் மிகவும் அவசியம் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

சர்க்கரை இனிப்பு வகைகள், கிழங்குகள் போன்ற குறிப்பிட்ட சில உணவு வகைகளைத் தவிர்த்து ஒவ்வொரு வேளையும் தவறாமல் சாப்பிடும் பழக்கத் தைக் கையாள வேண்டும். சரியாகச் சாப்பிடாதவர்கள், தாழ் சர்க்கரை (Hypoglycemia) நிலைக்கு அடிக்கடி உள்ளா கின்றனர். இதனால் சில நேரங் களில் நினைவிழக்கும் நிலைகூட ஏற்படுகிறது.

அடிக்கடி அதிகம் சாப்பிடு பவர்கள், இனிப்பு சாப்பிடு பவர்கள் ஆகியோருக்குச் சர்க் கரை நோய் சரியாகக் கட்டுப் பாட்டிற்கு வராமல் பல தொந் தரவுகளை ஏற்படுத்துகிறது. எடை அதிகமிருப்போருக்கு இதனால் எடையும் குறைவ தில்லை. சிலருக்கு, இந்த நோய் வந்தபின்னர் கூட இனிப்புப் பண்டங்கள் சர்க்கரை முதலிய வற்றை நீக்க மனம் வருவ தில்லை.

ஆக, இந்நோயின் தன்மைக்கு ஏற்ப, கணவன்மார்களும் உடன் இருப்பவர்களும் இந்நோய் பாதித்த பெண்மணிக்கு உதவி யாய் இருக்கவேண்டும். இவர் களும் உணவுக்கட்டுப்பாட்டின் அவசியத்தை உணர்ந்திருக்க வேண்டும். ஏனெனில், பெரும் பாலான வீடுகளில் பெண்கள் தான் சிறுகுழந்தை முதல் வயதான நபர்கள் வரை அவரவர்களுக்கு ஏற்ற உண வைச் சமைத்துப் பரிமாறு கிறார்கள். ஆனால் அவர்களுக்கு என்று வரும்போது அதற்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுப்பதில்லை; மற்றவர்களும் கொடுக்க முன் வருவதில்லை. இந்நிலை இருந்தால் உடனடி யாக மாற வேண்டும்.

மாதவிடாய் (After Meno-pause) நின்ற பெண்களிடம் இந் நோய் வேகம் சற்று அதிகமாகக் காணப்படுகிறது. மேலும் இந்த நிலைக்கு வந்த பெண்களிடம், இந்நோயுடன் உயர் இரத்த அழுத்தம் (High BP-Hypertension) இருதய இரத்தக் குழாய் நோய்களும் (Coronary Artery Disease - CAD) மாரடைப்பு ஏற்படு வதும் மிகப் பரவலாகக் காணப்படுகிறது.

**நம்மால் உடனே மாற்றி யமைக்க முடியாமற் போகலாம். மாற்றியமைக்க வேண்டும் என்று எண்ணுவது நம்மால் ஆகும். எண்ணிய எண்ணத்தைப் பிறரி டம் பரப்ப நம்மால் ஆகும். இன்று எண்ணத்தை வெற்றியுடன் பரப்பி விட்டால், நாளை அது எப்படியும் செயலாக உருக்கொள்வது திண் ணம். விதைத்த விதை முளைக் கத் தவறினாலும் தவறும். பெரும் பாலோர் எண்ணும் எண்ணம் செயல் ஆகத் தவறாது.**

\- டாக்டர் மு.வ.

சிலருக்குக் கண்கள் தெரிவதில்லை. காதுகள் கேட்பதில்லை, சிறுநீரகக் கோளாறும் இருக்கும். கடைசியில் நோயாளியின் கால்களேகூட இதன் விளைவாக எடுக்கப்பட்டு விடுகின்றன. சிலருக்கு டி.பி., ஆஸ்த்துமா, புற்று நோய் போன்றவைகளும் உடன் வருகின்றன.

ஆகவே, இப் பெண்மணிகளுக்குச் சிகிச்சையின் போதும், வீடுகளிலும் மிகவும் தனிக் கவனம் தேவைப்படுகிறது. இது போன்ற சூழ்நிலையில் குடும்பத்தினரின் ஆதரவு இல்லையெனில், இவர்கள் படும் துன்பங்கள் சொல்லிமுடியாது.

**கர்ப்பிணிப் பெண்களும் சர்க்கரை நோயும்**

இவர்களையும் இந்நோய் விட்டுவைப்பதில்லை. இந்நோயைக் கர்ப்பத்தின் போது பலவகையாகப் பிரிக்கலாம். ஏற்கெனவே சிறு வயது முதல் (Juvenile Diabetes) அது தொடர்ந்து இருந்துகொண்டு, அதனுடன் திருமண வாழ்க்கை, கர்ப்பம் தரித்தல், என்பது ஒரு வகை.

இவ்வகையில் இந்த நோய் ஆரம்பித்த நாள் முதல் சர்க்கரையைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும். கர்ப்பத்திற்கு முன்பு நல்ல கட்டுப்பாட்டில் வைத்திருப்பது மிகவும் அவசியம். அதோடு பிரசவிக்கும் வரையில் அடிக்கடி இரத்தப் பரிசோதனை செய்து மிகவும் கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும்.

இல்லையேல், கரு கலைந்து போதல் (Abortion), குறைப் பிரசவம், பிறப்பு ஈனம் (Birth defects) உள்ள குழந்தை, புத்தி மந்தம் உள்ள குழந்தை, மிகப் பெரிய குழந்தை முதலியன பிறக்க அதிக வாய்ப்புகள் உள்ளன.

அல்லது குழந்தை பிறப்பதற்கு முன் அல்லது பிறந்த உடன் இறந்து போவது மூச்சுத் திணறல் முதலிய சிக்கல்களைச் சந்திக்க வேண்டியிருக்கும்.

ஆகவே, பெற்றோர்களே தங்கள் பெண் குழந்தைக்குச் சர்க்கரை நோய் இருந்தால் ஆரம்ப காலம் முதல் கட்டுப்பாட்டில் கொண்டு வந்து பிரசவ காலத்தில் சற்று அதிகமான கவனத்துடன் செயல்பட்டால், பெரும்பாலும் அவர்களுக்குப் பிரசவத்தின் போது மேற்கூறப்பட்ட குறைபாடுகள் ஏதும் இருக்காது. பிரசவம் ஆன பின்பும் இந்நோய் தொடரும். அடுத்த பிரசவத்திற்கும் தொடரும். ஆகவே, ஓரிரு குழந்தையுடன் இவர்கள் கட்டாயம் நிறுத்திக் கொள்ளுவதுதான் நல்லது. அவர்கள் ஈன்றெடுத்த குழந்தைக்குச் சர்க்கரை நோய் வழக்கமாக வரும் என்ற அச்சம் தேவையில்லை.

கர்ப்பத்தினால் சர்க்கரை நோய் வருவது மற்றொரு வகை. (Diabetes due to pregnancy gestational diabetes). கர்ப்பத்திற்கு முன் இந்நோய் இருந்திருக்காது. பிரசவமான பின்பு வழக்கமாக இந்நோய் மறைந்து விடும். இது போன்ற பெண்கள் பெரும்பாலும் சர்க்கரை நோய்க் குடும்பத்தைச் சார்ந்தவர்களாய் உள்ளனர். அதாவது, இவர்களது அப்பா அல்லது அம்மாவுக்கோ அல்லது இருவருக்குமோ சர்க்கரை நோய் இருக்கலாம். அல்லது அவர்களுக்குச் சர்க்கரை நோய் இல்லாமல் இருந்தால் கூட சில பெண்களுக்குக் கர்ப்பத்தின் போது இந்நோய் வருவதுண்டு. இந்நோய் இருப்பது பெரும்பாலும் கர்ப்பிணிப் பெண்களுக்குத் தெரிவதில்லை.

இந்நோயினால் கர்ப்பம் பாதிக்கப்பட்டபின், உணருபவர்கள் ஏராளம். ஆகவே, இந்நோய் உள்ளதா எனக் கர்ப்பம் தரித்த நாள்முதல் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை இரத்தப் பரிசோதனை, சிறுநீர்ப் பரிசோதனை அவசியம் செய்து பார்த்துக்கொள்ள வேண்டும். இவர்களைப் பரிசோதனை செய்யும் பெண் சுகாதாரப் பணியாளர்கள் பெண் மருத்துவர்கள் இந்தப் பரிசோதனைகளின், முக்கியத்துவத்தை அவர்களுக்கு உணர்த்த வேண்டும்.

சாதாரணமாக, கர்ப்பம் தரிக்காத பெண்ணின் சர்க்கரையின் அளவைவிடக் கர்ப்பம் தரித்த பெண்ணின் சர்க்கரையின்

> **- வாயின்றி ஊமைய ராக - இந்த**
> **வையத்தில் வாழ்பவ ருண்டு !**
> **நோயின்றி வாழ்பவ ரில்லை - வரும்**
> **நோய்களுக்கும் அள வில்லை !**
> **- உவமைக் கவிஞர் சுரதா**

அளவு சற்றுக் குறைவாகவே இருக்கும்.

அதாவது, இரத்தப் பரிசோதனையில் சர்க்கரையின் அளவு 110 மி.கி. குறைவாகவே இருத்தல் வேண்டும். சற்றே அதிகமான சர்க்கரை கருவிற்கும், தாயாருக்கும் அதிகமான தொந்தரவுகளைக் கொடுக்கிறது. இது போன்ற சர்க்கரை நோய், கர்ப்பம் தரித்த ஆறு அல்லது ஏழாவது மாதத்தில் தோன்றி, புத்தி மந்தமான அல்லது மிகப் பெரிய குழந்தையை (Big baby-more than 3.5 kg) உண்டாக்கி விடுகிறது. கட்டுப்பாட்டில் வைத்திருந்தால் இத்தொந்தரவுகள் தோன்றுவதில்லை.

ஆகவே, இவர்கள் பிரசவத்திற்குப் பிறகு மாதம் ஒரு முறை பரிசோதனை செய்து, அதற்குத் தகுந்தாற்போல் சிகிச்சை எடுத்துக்கொள்ள வேண்டும்.

**மூன்றாவது வகையான நோயாளிகள்**

இப்போது சர்க்கரை நோய் இருபத்தைந்து வயதிற்கு மேல் வந்து, அதற்கு உணவுக் கட்டுப்பாடு அல்லது மாத்திரைகள் மூலம் கட்டுப் பாட்டில் உள்ள பெண்கள் கர்ப்பம் தரிப்பதாய் இருந்தால் என்ன செய்வது என்று பார்ப்போம். இதுபோன்ற நிலையில் பல பெண்கள் தற்போது உள்ளனர்.

ஆகவே, சர்க்கரை நோய் உள்ள குடும்பத்தைச் சார்ந்த பெண்களுக்குப் பத்தொன்பது வயதிற்கு மேல் திருமணம் செய்து முடித்து, இருபத்தைந்து வயதிற்குள் குழந்தைகளைப் பெற்று முடித்து விடுதல் நல்லது. கல்யாணத்திற்கு முன்பும் கர்ப்பம் தரிப்பதற்கு முன்பும் இந்நோயுடைய பெண்களுக்குத் தக்க அறிவுரை மற்றும் ஆலோசனை வழங்க வேண்டியுள்ளது (Pre-Marrital and Pre-pregnancy counselling essential).

இந்நோயை இன்சுலின் ஊசி மூலம் நல்ல கட்டுப்பாட்டிற்குக் கொண்டுவந்த பிறகு, கர்ப்பம் தரித்தால் நல்லது; மிகவும் அவசியமும் கூட.

கர்ப்பத்தின் போது, சர்க்கரை நோய்க்கு மாத்திரைகள் உகந்ததல்ல. இன்சுலின் ஊசி மூலம் சர்க்கரையை நல்ல கட்டுப் பாட்டில் வைத்திருப்பது மிகவும் அவசியம்.

'இன்சுலின்' ஊசியில் கூட மிகவும் சுத்தம் செய்யப்பட்ட மனித வகையைச் சார்ந்த 'இன்சுலின்' (Highly Purified Human Insulin) மிகவும் நல்லது. பழைய இன்சுலின் வகைகள் அவ்வளவாகச் சிறந்தது அல்ல.

ஆகவே பெண்கள் இந்நோயைச் சற்றுச் சிரமத்துடன் தான் சமாளிக்க வேண்டியுள்ளது. இந்நோய் சிறுமிகளுக்கு வந்தால் அவர்களது பெற்றோரும் சேர்ந்து துன்பப்பட வேண்டியுள்ளது. கர்ப்பத்தின் போது அதிகப்படியான கவனம் தேவைப்படுகிறது. இந்நோயுடன் அதன் பின் விளைவுகள், மற்ற நோய்கள் இருந்தால் சிரமங்கள் அதிகமாகின்றன. பாதித்தவருடைய ஒத்துழைப்புடன், அவர்களைச் சார்ந்தவர்கள், பெற்றோர்கள், கணவர் - மற்ற உறவினர்கள், நண்பர்கள் போன்றோர் ஒத்துழைப்பும், மருத்துவர் கண்காணிப்புடன் இருந்தால் இந்நோய் உடைய பெண்கள் சமுதாயத்தில் மற்ற பெண்களைப் போலவே நன்கு வாழலாம் (Normal Life Despite Diabetes). அஞ்சத் தேவையில்லை.

அண்மையில், 1994-95-இல் சென்னை மாவட்டத்தைச் சேர்ந்த 10 வயதுகுட்பட்ட நீரிழிவு நோயாளிகளிடையே ஓவியப் போட்டி ஒன்று நடத்தப்பட்டது. அதில் பங்கேற்ற லட்சுமி ப்ரியா என்ற சிறுமி முதல் பரிசாக மூவாயிரம் ரூபாய் பெற்றார்.

**'அருகம்புல்' சாறு நல்லதா?**

அருகம்புல் தூளோ, சாறோ நீரிழிவு நோய்க்கு நல்ல மருந்து என்று கூறப்படுகிறது; இது சரியல்ல.

அருகம்புல் சாறுக்கும் நீரிழிவு நோய்க்கும் எந்தவிதச் சம்பந்தமும் இல்லை. அருகம்புல் என்பது ஒரு சாதாரணப் புல்தான். அதற்கு எந்தவிதமான மருந்துவக் குணமும் இல்லை. இதற்கு எந்தவித் ஆதாரமும் கிடையாது என்று இந்திய நீரிழிவு நோய்க் கழகமே கூறியிருக்கிறது.

*(சந்திப்பு: பி.எல்.ஆர்.)*



**பெண்ணுக்குப் பேச்சுரிமை வேண்டாம்என் கின்றீரோ ?**
**மண்ணுக்கும் கேடாய் மதித்தீரோ பெண்ணினத்தை ?**
**பெண்ணடிமை தீருமட்டும் பேசுந் திருநாட்டு**
**மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற்கொம்பே !**
**- புரட்சிக்கவிஞர்**



# நூல் நயம்

## வாழ்த்துவோம் வணங்குவோம்

ஆசிரியர்: பாவலர் பட்டுக்கோட்டை இராசேந்திரன்

வெளியீடு: சங்கீதா பதிப்பகம்
14/2, பீட்டர்ஸ் காலனி,
சென்னை-14

விலை: ரூ.32 பக்: 198

தமிழுக்கு ஈடு இணை இல்லை. 'தமிழ்மொழி போல் இனிதாவ தெங்கும் காணோம்' என்றார் பாரதியார். அந்த அமுத மொழி யின் அருமை பெருமையைக் கோடிட்டுக் காட்டும் கவிதைதான் முதல் கவிதை 'தன்னேரில்லாத தமிழ்'.

கனிதரும் சுவையும், ஒத்த
காதலர் காணும் இன்பம்
நனிபெரும் மகிழ்வும், ஆவின்
நறுஞ்சுவைப் பாலும் வண்ணப்
பனிமலர்த் தேனும், தேனில்
படுமொரு சுவையும் எங்கள்
தனிநடைத் தமிழின் முன்னர்
தலைதூக்க வழியே இல்லை!

—என்று கன்னித் தமிழில் எழுதிய கவிஞரின் கன்னி முயற்சி இப்பாடல்.

கன்னி முயற்சியே கற்கண்டாய் இனிக்கின்றது. மற்ற கவிதை களையும் படிக்கின்றோம்; அவை தேன் பலாச் சுளைதான்!

இன்று கவிதை என்கிற பெயரில் பலவற்றைப் பார்க் கின்றோம், படிக்கின்றோம். இந்தச் சூழலில் எது கவிதை என்ற வினா எழுப்பி, விடையையும் கூறுகின் றார் கவிஞர்.

'கவிதையெனில் கவர்ச்சிமிக்க
வார்த்தை ஜாலம்
காட்டுகின்ற சொற்சிலம்பம்
மட்டும் அல்ல,
கவிதையெனில் சில அடுக்குச்
சொற்களாலே
கட்டிவைத்த கூறும் அல்ல,
கற்றறிந்தார்
கவிதையெனில் யாப்பிலக்கணத்
திற்குள்ளே
கட்டுவது தானென்றார். அதை
மறந்து
கவிதைஎன இன்றுசிலர் வெற்றுச்
சொல்லின்
குடும்பத்தைக் காட்டுகிறார். ஓ!
என் செய்வேன்!'

– என்று மரபுவழிக் கவிதை மலரவேண்டும் என்கிறார் கவிஞர்.

வாழ்த்துவோம், காதல் நினை வுகள், பன்மணித்திரள், வணங்கு வோம்என்று 3 பகுதிகளாகப்பிரித்து கவிதைகளைத் தொகுத்துத் தந் திருக்கிறார் கவிஞர். இதயத்திற்கு இதமான இனிய கவிதைகள்.

**—பொன். மறைமலை**

## மூலிகைக் களஞ்சியம்

ஆசிரியர்: மருத்துவர் திருமலை நடராசன்

வெளியீடு: பூங்கொடி பதிப்பகம்
14, சித்திரைக் குளம்
மேற்கு வீதி,
மயிலாப்பூர்,
சென்னை - 4

விலை.:ரூ.125 பக்: 752

நினைப்புக்கு எட்டாத நெடுங் காலத்திற்கு முன்பிருந்தே மூலிகை மருத்துவம் நடைமுறையில் இருந்து வந்திருக்கிறது. இதன் அற்புதச் சக்தி அறிந்த முனிவர்களும், மருத்து வர்களும் அதனை மக்களிடையே பரப்ப நினைத்தனர். நோயற்ற வாழ்வு வாழ்வதற்கு இந்த அரிய மூலிகைகளைப் பயன்படுத்தினர். அன்று தொடங்கிய தமிழ் மருத் துவம் இன்றைய நவீன உலகிலும் நற்பயன் விளைவித்து வருகின்றது.

இயற்கை தரும் செல்வங்களான இந்த மூலிகைகளின் தன்மைகளை விளக்கி, அவை குணப்படுத்தும் நோய்களையும் கூறி, தமக்குத்தாமே மருத்துவராக விளங்கிடும் வகை யில் வகுத்தும் தொகுத்தும் தந் திருக்கிறார் நூலாசிரியர்.

இந்நூலில் 431 மூலிகைக் குணங்கள் விளக்கப்பட்டுள்ளன. உதாரணமாக, அகத்தியம், இதன் வகை, குணம், வழக்கு முதலான தன்மைகளைக் கூறி, அவற்றால் எந்தெந்த நோய்களை எப்படிக் குணப்படுத்தலாம் என்று கோடிட் டுக் காட்டப்பட்டுள்ளது. இதே போல ஒவ்வொன்றும் விளக்கப்பட் டுள்ளது. மூலிகைப் பெருமை கூறும் வெண்பாவும் சேர்க்கப் பட்டுள்ளது. இல்லந்தோறும் இருக்க வேண்டிய இன்றியமையாத நூல்.

**–பி.வி.கிரி.**

## நமது சுதந்திரப் போராட்டங்கள்

ஆசிரியர்: துங்கவயல் லோகிதாசனார்

வெளியீடு: துங்கவயல் பதிப்பகம்
31 ஏ, சீனிவாசப்
பெருமாள் சன்னதி
முதல் தெரு,
சென்னை - 14

விலை: ரூ.28 பக்:214

சுத்தியின்றி ரத்தமின்றி யுத்தம் நடந்தது அன்று. அந்தப் புனிதப் போரின் விளைவாக, சுதந்திரம் என்னும் வெற்றிக்கனியைப் பறித்தோம். அந்த வீரப்போரில் பங்கு கொண்டவர்கள் யார்? எவர்? என்று பட்டியல் போட்டு ஒரு பட்டயம் தீட்டித் தந்திருக்கிறார் ஆசிரியர்.

இந்த நூலில் 17 கட்டுரைகள் உள்ளன. குஞ்சாலி மரக்காயர் முதல் சிட்டகாங் புரட்சி முடிய சுதந்திரப் போராட்டக் களங் களையும், அதில் குதித்த வீரர், வீராங்கனைகளையும் படம் பிடித் துக் காட்டுவது இந்நூலின் சிறப்பு.

**–பி.வி.ஜி.**

## காந்தியச் சிந்தனைகள்

ஆசிரியர்: டாக்டர் ம.பா.குருசாமி

வெளியீடு: காந்திய இலக்கியச் சங்கம்
மதுரை - 625020

விலை:ரூ.19 பக் 202

அண்ணல் காந்தியடிகளின் வாழ்க்கை, நமக்கெல்லாம் ஒரு முன்மாதிரியாகும். இப்படித்தான் வாழவேண்டும் என்பதற்கு அடித்தளமாக விளங்குவனவாகும். அவர் வாழ்ந்து காட்டிய நெறிகளும், வகுத்துக் காட்டிய கொள்கைகளும் நம்மை வழிநடத்திச் செல்லும் துணைவர்களாகும். அவரது சிந்தனை, செயல் எல்லாமே உலகை உயர்த்தும் உன்னதச் செல்வங்கள். அவற்றையெல்லாம் தொகுத்துச் சொல்கிறது இந்நூல்.

காந்தியடிகளின் வாழ்க்கை, விடுதலை இயக்கத்தில் அண்ணலின் பங்கு, சர்வோதயம், சமுதாய மாற்றங்கள், சத்தியாக்கிரகம், அகிம்சை என்று ஆறு பகுதிகளாகப் பிரித்து அண்ணலின் அற்புதமான கருத்துக்களை ஒன்று திரட்டித் தந்திருக்கிறார் தொகுப்பாசிரியர், இளைய தலைமுறை, இதயத்தில் பதிக்க வேண்டியவை.

—மறைமலை

## மல்லிகை முள்

ஆசிரியர்: ராஜ

வெளியிட்டோர்: சுஜயா பப்ளிகேஷன்ஸ்

பிளாட் 10, மோபரீஸ் கோர்ட்,

75, மோபரீஸ் சாலை
ஆழ்வார்பேட்டை,
சென்னை 600 018

பக்கம்: 160 விலை: ரூ.30

'வர்ணம்' என்பதில் தொடங்கி 'யாத்திரை' என்பது வரையிலான இனிக்கும் சிறுகதைகள் இருபத்து மூன்றின் தொகுப்பு நூல் இது. இனிய தமிழ், எளிய நடை.

ஒவ்வொரு சிறுகதையும் உள்ளது உள்ளபடியான யதார்த்த மான வாழ்க்கைச் சம்பவங்களோடு, ஒரு கதையைப் படித்துவிட்டு உடனே அடுத்த கதைக்குப் போய் விட முடியாதபடி ஒவ்வொன்றும் நம்மை ஆழ்ந்து சிந்திக்கச் செய்வ தாக உள்ளது. எந்தக் கதையின் தொடக்கமும் அதன் முடிவு இப்படித்தான் இருக்கும் என்று முன்கூட்டியே முடிவெடுக்க விட வில்லை என்பது மற்றொரு சிறப்பு.

கதைகளைப் படிக்கிறபோது நம்மை அறியாமல் நாமே சில கதைகளின் உறுப்பினர்கள் ஆவது போல உணர்கிறோம். சிந்திக்க வைக்கும் சிறுகதைகள், பூரிக்க வைக்கும் புதினங்கள் மலர்வது அருகி வரும் இக்காலத்தில், ராஜ் எழுதியுள்ள 'மல்லிகை முள்' ஒரு குறிஞ்சிப் பூவாக எல்லோரையும் எளிதில் கவரும் என்பது திண்ணம்.

—'சோழராஜா'

## பேச முடியாமை ஏன்?

ஆசிரியர்: ஜான் முருகசெல்வம்
ஜாய்ஸ் முருகசெல்வம்

வெளியீடு: அலைகள்
வெளியீட்டகம்,
36, தெற்கு சிவன்
கோயில் தெரு,
கோடம்பாக்கம்,
சென்னை 24

பக்கம்140 விலை ரூ.22

குழந்தைகள் பேச இயலாது போய் விடுவது எதனால்? என்பதற்கான காரணங்களையும், அவற்றை எந்தவகையில், எந்த அளவு நிவர்த்தி செய்யலாம் என்பதையும் விளக்கும் அருமையான நூல். ஆழ்ந்த ஆய்வும், விளக்கமும் வியப்பூட்டுபவை. ஒவ்வொரு இளம் பெற்றோரிடமும் இருக்க வேண்டிய நூல்.

கீழ்க்காணும் இரண்டு நூல்கள் பாரதி பதிப்பகம் வெளியிட்டவை.

முகவரி
108, உஸ்மான் சாலை,
தியாகராய நகர்,
சென்னை 600 017

நூலாசிரியர்:
டாக்டர் சோ. சேசாசலம்

## 1. பிளாட்டோவின் நம்மை மேம்படுத்தும் எண்ணங்கள்

பக்கம்: 66 விலை: ரூ.8

கிரேக்கத் தத்துவ ஞானியான பிளாட்டோ உதிர்த்த முத்துக்கள் நூல் முழுவதும் விரவியுள்ளன. அரிஸ்டாட்டிலின் மாணவரான இவர், வாழ்வாங்கு வாழ்வதற்கான வளமையான கருத்துக்களைத் தந்திருக்கிறார். அவற்றையெல்லாம் அழகுறத் தொகுத்துத் தந்துள்ளார் ஆசிரியர்.

## 2. அரிஸ்டாட்டிலின் நம்மை மேம்படுத்தும் எண்ணங்கள்

பக்கம்: 65 விலை: ரூ.8

ஏதென்ஸ் நாட்டின் தத்துவ ஞானி அரிஸ்டாட்டில். மாவீரன் அலெக்சாண்டரின் ஆசிரியர். புரட்சிக் கருத்துக்களைப் பொழிந்தவர். அவர் கூறிய அரிய கருத்துக்கள், அவரது வாழ்க்கைக் குறிப்புடன் நூலில் தரப்பட்டுள்ளது. படிக்க வேண்டிய தொகுப்பு.

- பி.வி. கிரி.

## வாழ்வியலில் அறிவியல்

ஆசிரியர்: கார்த்திகேயன்

வெளியீடு: மோகன் புத்தக நிலையம்
4, வள்ளலார் தெரு,
பத்மநாப நகர்,
சூளைமேடு
சென்னை 600 094

பக்கம்: 128 விலை: ரூ.17

அறிவியலால், கண்டுபிடிக்கப் பட்ட புதிய பல கண்டுபிடிப்புகளால் உலகம் பெரும் பயன் அடைந்து கொண்டிருக்கிறது. இயற்கையில் உள்ள அற்புதங்கள்தான் எத்தனை? இந்நூலில் அறிவியல் மற்றும் இயற்கைச் செல்வங்கள் நமது அன்றாட வாழ்வில் எவ்வளவு பயன் தருகின்றன? விளக்குகிறது இந்நூல். மிகவும் பயனுள்ள தகவல் களஞ்சியம்.

- குமார்.

# தமிழரசு

## அடுத்த இதழ்...



மாண்புமிகு முதலமைச்சர்
புரட்சித் தலைவி
டாக்டர் ஜெ. ஜெயலலிதா
அவர்கள்
ஆட்சியின் மாட்சியை
விளக்கிடும் நான்காண்டுச்
சாதனை மலராக
மலரவிருக்கின்றது!

* எண்ணம் கவரும் வண்ண முகப்பு!
* சிந்தைக்கு விருந்தூட்டும் சிறப்புக் கட்டுரைகள்!
* பக்கத்துக்குப் பக்கம் சாதனைப் பூக்கள் மலர்ந்து மணம் வீசும்!
* அதிகப் பக்கங்களில் அற்புதச் சிறப்பிதழ்

**தமிழரசு**

படிக்க - பயன்பெற - பாதுகாக்க

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தி. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927


தூய
பட்டு
தூய
சரிகை
ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ–ஆப்டெக்ஸ்.
கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி



